# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 07 அதிர்வு 76 ஐப்பசி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162







# நிகழ மறுத்த நீதி











ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au www.srikumaran.com.au




# அரசியலில் மதம் நுழையலாம்?

உலகெங்கிலும் மன்னராட்சி நடந்துவந்த காலகட்டங்களில் மதம் என்பதும் அரசுடனும் அரசருடனும் நெருக்கமான உறவில் இருந்தது. இந்தியா உட்பட எல்லாநாடுகளிலும் இந்தச் சூழல்தான் நிலவியது.

அந்தக் காலகட்டங்களில் நடந்த பல போர்கள் மதத்தின் பொருட்டே நடத்தப்பட்டன. ஜெருசலேமில் உள்ள புனிதத்தலங்களைக் கைப்பற்ற கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே புனிதப்போர் (Crusades) நடந்தது. தொடர்ந்து பல கட்டங்களாக இரு நூற்றாண்டுகளுக்கும் (11-13 ஆம் நூற்றாண்டுகளில்)மேலாக நடந்த இந்தப் போர் இருமதங்களுக்கும் இடையே பெரும் வரலாற்றுக் கசப்பாக உருவாகியது.

பதினேழாம் நூற்றாண்டில் நடந்த 'முப்பது ஆண்டு யுத்தம்' கிறிஸ்தவப் பிரிவுகளுக்கு இடையிலேயே நடந்தது. ரோமன் கத்தோலிக்கர்களுக்கும், ஜெர்மானிய புரெட்டெஸ்டெண்ட் பிரிவினருக்கும் இடையே நடந்த இந்தப் போரில் 40 லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மதம் என்பது சமூகத்திலும் மிகவும் முக்கியமான அங்கமாக விளங்கியது. நவீன அறிவுத்துறைகள் உருவாக முன்னர் மனித குலத்தில் மொத்த அறிவும் மதம் அல்லது மதம் சார் அறிவாகவே இருந்து வந்தது. வரலாறு, புராணம், வானியல், மருத்துவம், ஜோதிடம், அரசமைப்பு என்று மத நூல்கள் எல்லா விஷயங்களைக் குறித்தும் வழிகாட்டுதல்களை கொண்டிருந்தன.

கல்வி என்பது பெரும்பாலும் மதம் சார் கல்வியாகவே இருந்தது. பதினான்காம் நூற்றாண்டில் உதயமான ஐரோப்பிய மறுமலர்ச்சிக்காலம் (Rennainsance) பல துறைகளில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது. கணிதம், கலை, வரலாறு, தத்துவம் போன்ற துறைகள் மதங்கள் வகுத்தளித்த சட்டகங்களைத் தாண்டி விஞ்ஞானபூர்வமாக தமது அறிதல்களை உருவாக்கிக்கொள்ளத் தலைப்பட்டன. கலிலியோவின் கதையை இதற்கு நல்ல உதாரணமாகச் சொல்லலாம். பதினாறாம் நூற்றாண்டில் பிறந்த கலிலியோ அந்தக் காலகட்டத்தில் கணிதம் உட்பட வேகமாக வளர்ந்து வந்த பிற அறிவுத்துறைகளில் நல்ல தேர்ச்சி கொண்டவராக இருந்தார்.

அவர் கண்டுபிடித்து, மேம்படுத்திய தொலைநோக்கி அதுவரை நம்பப்பட்டு வந்த பல விஷயங்களை உடைத்துப் போட்டது. தனது தொடர் ஆய்வுகள் மூலம் 'பூமி தான் சூரியனைச் சுற்றுகிறது - மத நூல்கள் சொல்வதைப் போல பூமியைப் பிற கிரகங்கள் சுற்றவில்லை' - என்பதை ஆய்வுபூர்வமாகக் கண்டறிந்தார். இந்தப் புதிய அறிதல் அவரைப் பெரும் சிக்கலுக்கு உள்ளாக்கியது. மத நூல்களுக்குப் புறம்பான தனது புதியஅறிதலை பிற மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதைக் காரணம் காட்டி சிறைப்படுத்தப்பட்டார். தனது இறுதிக்காலத்தில் பார்வை இழந்து மனம் உடைந்து உயிரிழந்தார். கலிலியோவின் கொள்கைகள் சரியானவையே, அவர் மீது எந்தத் தவறும் இல்லை என்று சமீபத்தில் தான் (1992 இல்), கத்தோலிக்க மதம் அவரை மதநிந்தனைக் குற்றத்தில் இருந்து விடுவித்தது.

இந்தப் புள்ளியில் இருந்தே மதங்களில் இருந்து பிற அறிவுத்துறைகள் தனித்தனியே தமது போக்கில் பரிணாமம் கொள்ள ஆரம்பித்தன எனக் கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த காலனியாதிக்கம் மற்றும் தொழிற்புரட்சி போன்றவை இந்த அறிவுத்துறைகளை மேலும் விரிவாக்கி பல புதிய அறிதல்களை நோக்கிய மானுடத் தேடல்களை நிகழ்த்தின. புராணங்களில் இருந்து வரலாறு பிரிந்தது, ஆன்மிகச் சிந்தனையில் இருந்து தத்துவம் பிரிந்தது, ஜோதிடத்தில் இருந்து வானியல் பிரிந்தது. சமூகத்தின் அன்றாடச் செயற்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிகளை ஒட்டி நிகழ ஆரம்பித்தது. மதம் என்பது ஆன்மிகம், பக்தி, வழிபாடு என்ற அளவிலேயே செல்வாக்குக் கொண்ட ஒன்றாக இயங்க ஆரம்பித்தது.

பின்காலனிய ஜனநாயகப்படுத்தல் பரவலாக பல நாடுகளில் நிகழ ஆரம்பித்தது. குறிப்பாக உலகப் போர்களுக்குப் பின்னான அமைதிக் காலகட்டத்தில் பல நாடுகளில் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பெரும் வளர்ச்சியும் மறுகட்டமைப்பும் நடந்தன.இதன் பகுதியாக நவீன ஜனநாயக அரசியலமைப்புச் சட்டங்களைப் பல நாடுகளும் ஏற்றுக்கொண்டன. இந்தப் புதிய அரசியல் சாசனங்கள், மத நூல்கள் இதுவரையிலும் அரசின் மீது செலுத்தி வந்த செல்வாக்கைப் பின்னுக்குத்தள்ளி குறியீட்டு ரீதியாகவும், நடைமுறையிலும் அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டன. தனி மனித உரிமைகள், சுதந்திரங்கள், மதச்சார்பின்மை போன்றவை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீன விழுமியங்கள் ஆயின. ஆனால் எழுபதுகளின் காலகட்டத்தில் இப்படிப் புதிதாக உருவான ஜனநாயகக்கோட்பாடுகள், தங்களை ஸ்திரமாக நிறுத்திக்கொள்ளத் தடுமாறின. இந்தத் தடுமாற்றம் பல இடங்களில் இராணுவ சர்வாதிகாரம் உருவாக வழிவகுத்தது. ஈரான் போன்ற இன்னும் சில நாடுகளில் மத மைய ஆட்சி முறைக்கு வழிவகுத்தது. சில இடங்களில் இரண்டுமே நிகழ்ந்தன.

1970 கள் வரை நவீன மதச்சார்பற்ற நாடாகத் திகழ்ந்த ஈரான், ஷியா மதகுருவான கொமேனியின் மத அதிகாரத்தின் கீழ் வந்தது, மதச்சட்டங்கள் அமுலுக்கு வந்தன. ஆப்கானிஸ்தானிலும் இதேதான் நடந்தது. நவீன சமூகமாக இருந்த ஆப்கானிஸ்தான் மீண்டும் மத அதிகாரத்தின் கீழ் சென்றது. அமெரிக்கா பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் முன்னரே (1920) ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு வாக்குரிமை அளித்திருந்தது என்பது பலருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம். பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இராணுவச் சர்வாதிகாரம் மற்றும் மத அதிகாரம் என்பன கைகோர்த்தன.

பௌத்த மத அதிகாரம் பர்மா, தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் வலுப்பெற ஆரம்பித்தது. அந்நாட்டு அரசியலிலும் சமூக நிகழ்வுகளிலும் பௌத்த பிக்குகள் பெரும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தனர். இவ்வாறாக மத அதிகாரம் அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்வது நீண்டகால நோக்கில் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை புரிவதாக அமையாது. கடந்த ஐம்பதாண்டு உலக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் கூட இந்த உண்மையை நாம் கண்கூடாக அறியலாம். இதற்கு எந்தமதமும் விதிவிலக்கல்ல.

ஆப்கானிஸ்தான் முழு முற்றாக மதச்சட்டங்கள் மீது உருவாக்கப்பட்ட ஒரு அரசியல் மாதிரியைத் தற்போது கொண்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட மக்கள்தொகையில் பாதியாக இருக்கும் பெண்களை எல்லா விதங்களிலும் முடக்கி வைத்திருக்கிறது. கல்வி, வேலை வாய்ப்பு உட்பட. பெண் குழந்தைகள் ஆரம்பக்கல்விக்கும் மேல் படிக்கவே முடியாது என்னும் சூழல். இது பல்வேறுவிதமான சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்களை உருவாக்குகிறது.

பாகிஸ்தான் தனது உருவாக்க காலம் தொட்டு தன்னை ஒரு இஸ்லாமிய நாடாகவே அடையாளப்படுத்தியது. அங்கு செயற்படும் கட்சிகள் அனைத்தும் மதவாதத்தை ஏற்றுக்கொண்ட கட்சிகளே. ஆனால் இது அவர்களின் வளர்ச்சியையும் மக்களில் நல்வாழ்வையும் காலப்போக்கில் கீழிறக்குவதாகவே அமைந்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே சமயம் சுதந்திரம் பெற்றன என்றாலும் இன்று பாகிஸ்தான், இந்தியாவை விட முப்பது ஆண்டுகள் பின்தங்கியிருக்கிறது.

கிறிஸ்தவமும் இதே போன்ற செல்வாக்கை ஹங்கேரி போன்ற நாடுகளில் செலுத்துகிறது. தமது ஆட்சியை ஸ்திரப்படுத்திக்கொள்ள மதசபைகளின் ஆதரவை ஆட்சியாளர்கள் கோருகிறார்கள். மெல்ல மெல்ல அது ஆட்சியின் மீதான மத அதிகாரத்தின் பிடியாக மாற ஆரம்பிக்கிறது. விக்டர் ஓர்பான் ஹங்கேரியை தற்போது 'கிறிஸ்தவ ஜனநாயகம்' என்றே குறிப்பிடுகிறார்.

இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் பௌத்த மதவாதம் எப்படி சிறுபான்மையினரை, அவர்களின் மத நம்பிக்கைகளை முடக்குகிறது என்பதை நேரடியாகவே பார்க்கிறோம். இந்தியாவும் இந்தத் திசை நோக்கியே நகர்கிறது. இந்திய அரசியலில் மேலெழுந்திருக்கும் மதவாதம் சிறுபான்மையினரை வெறுப்புடன் நோக்குகிறது. அவர்களை இரண்டாம்தரக் குடிமக்களாக உருவகம் செய்கிறது.கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதன் முந்தைய பத்தாண்டுகள் வளர்ச்சியை விட 2 % குறைந்திருக்கிறது. மதவாதத்தில் கொள்ளும் கவனம் பொருளாதார வளர்ச்சியையே பாதிக்கிறது.



கார்த்திக்வேலு

மத நம்பிக்கைக்கும் சமகால அரசியலுக்கும் நேரடியாகவே ஒரு பொருந்தாமை உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி, உலகமயமாக்கல், குடியேற்றம் போன்றவை நமது சமூகங்களை பல்கலாசார, பல் நம்பிக்கை கொண்ட ஒன்றாக மாற்றியிருக்கின்றன. மதம் என்பது அடிப்படையில் நம்பிக்கையை அதன் அடித்தளமாகக் கொண்டது. ஒரு நவீன சமூகத்தில் மதங்களை ஒட்டி அரசாட்சி நடக்கும் என்றால் அவை எப்படி ஒன்றுடன் ஒன்று நேரடியாக மோதும் என்பதையும் நாம் உணரலாம். இதுதான் நான் மேலே குறிப்பிட்ட மதப்போர்களும் சுட்டுகின்றன. மதங்களுக்கும், அவை முன்வைக்கும் நம்பிக்கைகளுக்கும் இடையே சமரசப் புள்ளி என்பதே நிகழாது.

ஆனால் நம் நவீன சமூகம் மிகச்சிக்கலானது, பல அடுக்குகளைக் கொண்டது. ஒவ்வொரு கொள்கையும், திட்டமும் அரசியல் வழிகாட்டலும் பல்வேறு தரப்பின் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டு, நன்மை தீமை ஆராயப்பட்டு ஒரு சமரசப்புள்ளியை அடைவதே நவீன ஜனநாயகம். இந்த சமரசங்களுக்கும், மறுசீரமைப்புக்கும் (reform) மதங்கள், மத நம்பிக்கைகள் ஈடுகொடுக்க முடியாது. ஆனால் நம் அரசியலமைப்பும், சட்டங்களும் அதற்கு இடம் கொடுக்கும். காலத்துக்கு ஏற்றவாறு அதை நாம் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

மதம் எங்கெல்லாம் அரசியலில் நுழைகிறதோ அங்கெல்லாம் அந்நாட்டின் பொருளாதாரம், வளர்ச்சி போன்றவை சிதையும். காரணம் தேர்தலில் வளர்ச்சியோ, மக்கள் நலத்திட்டங்களோ முக்கியமான பேசுபொருளாக இருக்காது. மதம், மத நம்பிக்கைகளைப் பாதுகாத்தல், இன்னும் தூய மதநம்பிக்கைகளை நோக்கிச் செல்லுதல், மத அடிப்படைவாதம் என்று தான் போகும். நிர்வாகம், வளர்ச்சி, நலத்திட்டங்கள் அதன் அடிப்படையில் ஒரு அரசைத் தேர்வு செய்வது நிகழாது.

தற்போது ஆஸியின் சமூகக் கட்டமைப்பைப் பார்த்தால், இது பெரும்பான்மை கிறிஸ்தவ நாடு. நாளை இந்தியா போன்றோ, பாகிஸ்தான் போன்றோ இலங்கை போன்றோ இங்கும் ஒரு பெரும்பான்மை மதவாத அரசு அமையும் என்றால் இங்கு இந்துக்கள் உட்பட பிற சிறுபான்மையினர்களின் நிலை என்னவாக இருக்கும்? இப்படி ஒரு சூழல் வரும் என்றால் அதை ஏற்போமா அல்லது ஆதரிப்போமா? அப்படி இருக்க நாம் பிறநாடுகளில் மட்டும் இவ்வாறான மதப்பெரும்பான்மைப் போக்கு உருவாக்கும் சூழலை ஆதரிப்பது எவ்விதத்தில் நியாயமாகும்?

ஜனநாயகத்தில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கலாம், பல சமயங்களில் அது நம்மைக் கைவிடவும் செய்யலாம். ஆனால் இதுவரை மனிதகுலம் கண்டடைந்த அரசியல் அணுகுமுறையில் இதுவே அனைவரையும் உள்ளடக்கி, அனைவரின் குரலுக்கும் கோரிக்கைகளுக்கும் பங்களிப்பை உறுதி செய்யும் ஒரு அரசியல் வடிவம். மதங்கள் மற்றும் மதம் சார் நம்பிக்கைகளைத் தூக்கி எறிய வேண்டும் என்று சொல்லவில்லை, அப்படிச் செய்யவும் முடியாது. அவை தனிமனித வாழ்வியல் நம்பிக்கைகளாக ஆன்மிகத் தேடல்களாக, அவைகளுக்கு உரிய தளங்களில் மட்டுமே இயங்க வேண்டும். அதுவே மதத்துக்கும் நல்லது. மதங்கள் தமது ஆன்மிக ஆழத்தை, முதிர்ச்சியை இதன் மூலம் பேண முடியும், நமக்குமே இது நல்லது. அரசியல் கலவாத இளைப்பாறலுக்கான, அக மேம்பாட்டுக்கான களமாக மதம் அமையும் நாட்டுக்கும் இதுவே நல்லது. மதநம்பிக்கைகளை சட்டங்களாக திட்டங்களாகக் கொண்டு செல்லும் சுமை இருக்காது.

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 76 ஐப்பசி 2023 தொ.பே:1800 960 162

# நிகழ மறுத்த நீதி

எல்லோரது குரலும் கேட்கப்படும்
எல்லோரது குறையும் தீர்க்கப்படும்
எல்லோரது காயமும் ஆற்றப்படும்
எல்லோரது கண்ணீரும் துடைக்கப்படும்
எல்லோரது பேச்சும் மதிக்கப்படும்
எனச் சொல்ல
ஆசையாகத்தான் இருக்கிறது – ரவிக்குமார்

கூடாரம் ஒன்றில் ஒருவன் தங்கியிருந்தான். வெளியே ஒட்டகம் ஒன்று படுத்திருந்தது. இரவு அதிக குளிர் குளிர் தாங்காமல் ஒட்டகம் சிறிது மூக்கை கூடாரத்தினுள்ளே நுழைத்தது. இவனும், சரி மூக்கை மட்டும் தானே உள்ளே நுழைக்கிறது என்று விட்டு விட்டான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முகம், கழுத்து, வயிறு என முற்றிலுமாக கூடாரத்துக்குள் நுழைந்து படுத்துக் கொண்டது அந்த ஒட்டகம். அதற்குள் இருந்த மனிதன், இடம் போதாமலும், ஒட்டகத்தை வெளியிலும் தள்ள முடியாமலும், வெளியே படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம். இப்படி அந்த ஒட்டகம் கூடாரத்துக்குள் வந்தேறியாக, உள்நுழைந்து அந்தக் கூடாரத்துக்குச் சொந்தமான மனிதனையே ஆட்டிப் படைத்த இந்தக் கதையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம் . இந்த ஒட்டகம் போன்று ஆஸ்திரேலியாவில் நுழைந்த ஐரோப்பியர்கள் கூடாரத்தை (இருப்பிடத்தை) பூர்வகுடிகளிடமிருந்து பறித்து எந்த உரிமையுமின்றி அவர்களை மூன்றாம்தர மக்களைப் போல நடத்தி வந்த வரலாறு நமக்குத் தெரியுமல்லவா. பறித்துக்கொண்டவன் என்றுமே அதன் உரிமையாளனுக்கு திருப்பி அளிப்பதோ, பகிர்ந்து கொள்வதோ வரலாற்றில் மிக அரிது .பூர்வகுடிகளூக்கு கிடைக்க வேண்டிய நீதியை நாம் அநியாயமாகத் தவற விட்டிருக்கிறோம்.

ஆஸ்திரேலிய தலைநகர யூனியன் பிரதேசம் ( ACT ) தவிர மற்ற எல்லா மாகாணங்களிலும் பூர்வகுடிகளுக்கு அதிக அங்கீகாரம் வழங்க வகைசெய்யும் குரலுக்கான வாக்கெடுப்பு படுதோல்வி அடைந்திருக்கிறது. ஆனால் பொய்மையும் ,கயமையும் அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை மிகவும் வருத்தத்துடன் பதிவு செய்கிறோம் . எதிர்த்தரப்பு என்னென்ன பொய் பிரசாரங்களைச் செய்திருக்கின்றன என்று பார்த்தால் வாய்மையை விட பொய்யே வெல்லும் என்பது தெரிகிறது. அதாவது இந்த வாக்கெடுப்பு வெற்றிபெற்றால் ஆஸ்திரேலியர்கள் வீடுகளின் உரிமையை இழப்பார்கள், பூர்வகுடிகளின் குரல் சட்டரீதியாக ஆபத்தானது ,தேசத்தைப் பிரிக்கும், cShU போன்ற ஒப்பந்தங்களை கட்டாயப்படுத்தும் மற்றும் ஐ.நா சபை ஆஸ்திரேலியாவைக் கைப்பற்றிவிடும் என்று பலவிதமான கட்டுக்கதைகள் எதிர்கட்சியினர் டிரம்ப் பாணியில் பரப்பினர். இது மட்டுமல்லாமல் எந்தவித ஆதாரமுமின்றி குரல் வாக்கெடுப்பில் போதுமான விவரங்கள் இல்லை மற்றும் ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையம் உங்கள் வாக்குகளைச் சேதப்படுத்தும் என்ற பொய்ச்செய்திகளையும் அவிழ்த்துவிட்டனர் . உண்மை ஒலியின் வேகத்தில் பயணித்தால் பொய்கள் ஒளியின் வேகத்தில் பயணிக்கும் என்று சொல்வார்கள். ஆஸ்திரேலியாவின் சரித்திரத்தில் ஒக்ரோபர் 14 ஆம் திகதி அன்று உண்மையின் ஒலியானது பொய்யின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல், மௌனமாகி நிற்கிறது.

இந்த வெற்றி எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டனுக்கு கிடைத்த வெற்றி என்று சொல்லமுடியாது. ‘ஒவ்வொரு சொல்லுக்கும் சிந்தனைக்கும் பின்னே ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கிறது’ என்று சொல்வார் மாசேதுங். இன்று வெளியான மக்கள் குரலின் தீர்ப்பிலிருந்து நமது முத்திரைகளின் முகத்திரைகளை அறிந்து கொள்ளலாம். அந்த முகத்திரைகளூக்குப் பின்னுள்ள உண்மையான முகங்களை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது . எவ்வளவு முன்னேறிய சமூகமாக ஆஸ்திரேலிய மக்கள் இருந்தபோதிலும் இன்னும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க பரந்த மனப்பான்மை வரவில்லை என்பதையே இது காட்டுகிறது. மாமன்னன் படத்தில் உயர்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ரத்தினவேலு ( பஹத் பாசில் ) தன் சாதி மக்களின் காலில் விழ யோசிக்கும்போது அவர் தந்தை அறிவுரை சொல்வதாக ஒரு வசனம் வரும். “உனக்கு மேல இருக்கிறவங்ககிட்ட தோற்கலாம் தப்பில்ல, கூட இருக்கிறவங்ககிட்ட தோற்கலாம் தப்பில்லை, ஆனா உன்ன விட கீழ இருக்கிறவங்க கிட்ட தோற்பது மகா தப்பு”. இந்தத் தேர்தல் முடிவும், ஆஸி மக்களும் இதே வக்கிர மனநிலையில் தான் இன்னமும் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

வாக்கெடுப்பின் முடிவுகளுக்கு பிறகு பிரதமர் அல்பானிஸ், “நமது பலத்தை மீண்டும் சேகரித்து உறுதியுடன், நீதி மற்றும் நமது உரிமைகளுக்கான புதிய திசையை நாம் தீர்மானிக்கும் தருணத்தில் நாம் மீண்டும் ஒன்றுபடுவோம். நமது முன்னோக்கி செல்லும் பாதையை கவனமாக பரிசீலிக்க சரியான நேரத்தில் கூடுவோம்.” என்று தெரிவித்துள்ளார். இந்த தோல்வியானது , இருநூறு ஆண்டுகள் பல இன்னல்கள் அனுபவித்த பூர்வகுடிகளை ஊமைகளாக்கி விட்டிருக்கிறது. இந்த தோல்விக்கு பிறகு பூர்வகுடிகளின் cShU அறிக்கையில் வலியுறுத்தப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேறு என்ன வழிகள் உள்ளன, அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

நீளந் தாண்டுதலில் எந்தளவுக்குப் பின்னால் ஓடுகிறீர்களோ, அந்த அளவுக்கு அதிகமான தூரத்தை நீங்கள் தாண்ட முடியும். வரலாற்றைப் படிப்பதும் அப்படித்தான்” எனக் குறிப்பிட்டார் வின்செண்ட் சர்ச்சில். பூர்வகுடிகளின் குரல் வாக்கெடுப்பின் தோல்வி கூட ஒரு சிறு பின்னடைவே ஒழிய , வெற்றி வெகுதூரத்தில் இல்லை என்று மனம்தளராமல் கடமையாற்ற வேண்டிய நேரமிது.

# விக்டோரியா தமிழ்க் கலாசார மண்டபத்தில் இருந்து அகதிகள் விரட்டப்பட்டனரா?

● ஜே.ஜே.

விக்டோரியா தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாமனிதர் பேராசிரியர் சி.ஜே.எலியேஸர் ஞாபகார்த்த விரிவுரை 24 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. understanding the voice referendum என்ற தலைப்பில் இந்தநிகழ்வு இடம்பெற்றது.

மொனா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மெலிகஸ்டன் மற்றும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கான விக்டோரியா மாநில செனட்டர் ஜனா ஸ்ரீவாட் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு டன்டிநொங் பிரதேசத்திலிருக்கும் விக்டோரிய தமிழ்க் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மாமனிதர் பேராசிரியர் சி.ஜே.எலியேஸர், தமிழ் இனப்படுகொலைக்கு எதிராக நீண்டகாலமாகக் குரல் கொடுத்தவர். புலம்பெயரும் தமிழ் அகதிச் சமூகத்துக்கு உறுதுணையாகச் செயற்பட்டவர். தமிழ் மக்களின் விடிவுக்காக இறுதிவரை குரல் கொடுத்துவந்தவர். வாழும் காலத்திலேயே தமிழீழத் தேசியத்தலைவரால் ’மாமனிதர்’ என்ற உயரிய கௌரவம் வழங்கப்பட்டவர். இவ்வாறான மாமனிதனின் நிகழ்வில் தாம் விரட்டப்பட்டதாக எதிரொலியை தொடர்பு கொண்டு ’அகதிகள்’ பலர் தெரிவித்திருந்தனர். இது குறித்து அகதிகள் தெரிவித்த கருத்துகள் மற்றும் விக்டோரியா தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகத்தின் சார்பில் தெரிவித்த கருத்துகளையும் பகிர்கின்றோம்.

## குரல்-1

“விக்டோரியா தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாமனிதர் பேராசிரியர் சி.ஜே.எலியேஸரின் நிகழ்வுக்கு ஏன் நாங்கள் சென்றோம் என்றால் அவர் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த ஒருவர். அவரின் நிகழ்வில் செனட்டரை சந்தித்து எங்களுக்காகவும் குரல் கொடுங்கள் என வலியுறுத்தவே சென்றிருந்தோம். நாம் ஆர்ப்பாட்டம் செய்யவும் இல்லை, அந்த நோக்கமும் இல்லை. ஆனால், நாங்கள் நிகழ்வுக்குள் செல்ல முன்னரே மண்டபத்தின் வாசலிலேயே வழி மறிக்கப்பட்டுவிட்டோம். எங்களைச் சுற்றி நாலைந்து பேர் வட்டம் போட்டுக்கொண்டிருந்தனர். பின்னர் ஒரு மாதிரி உள்ளே சென்றோம். எங்களை பின் கதிரைகளில் மட்டுமே அமர அனுமதித்தனர்.

செனட்டர் பேசி முடியும் வரை நாம் காத்திருந்தோம். அதன் பின்னர் நான் தயவுசெய்து நான் ’உங்களிடம் கேள்வி ஒன்றைக் கேட்க வேண்டும் அனுமதியுங்கள்’ என்று ஆங்கிலத்தில் கேட்டேன். அந்த ஒற்றை வசனத்தை தவிர்த்து நான் ஏதும் கேட்கவில்லை. சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் என் பின் கழுத்தைப்பிடித்து இழுத்து வெளியே அனுப்ப முயற்சித்தார்.

‘11 வருடங்கள் கடந்தும் நாம் நிர்க்கதியாக நிற்கின்றோம். எங்களுடைய பிரச்சினை குறித்து செனட்டர் குரல் கொடுக்க முடியுமா ?’ என்ற கேள்வியே என்னிடமும் எம் சார்ந்த அகதிகளிடமும் இருந்தது.

அங்கிருந்த நான்கைந்துபேர் எங்களை வெளியேற்றுவதற்காக வன்முறைச் சொற்களைப் பயன்படுத்தினர். அதில் ஒரு ஐயா எங்களைப் பார்த்து காறித்துப்பினார். சிலர் கெட்டவார்த்தையால் பேசினர்.

கல்வி கற்ற சமூகத்தை சேர்ந்தவர்கள் - தங்களைத் தாங்களே நாகரிகமானவர்கள் என்று கூறிக்கொள்ளும் நபர்கள் கழுத்தைப் பிடித்து தள்ளிவிடுவது தான் தமிழ் கலாசாரமா...? தமிழ்ச் சங்கம் என்று சொல்பவர்கள் தமிழ் அகதிகளை ஏற இறங்கப் பார்க்கிறார்கள். இந்த ஏற்றத் தாழ்வை எப்படி இந்தத் தமிழ்ச் சமூகம் பார்க்கிறது. இதன்



பின்னர் அங்கு வேறொரு மண்டபத்தில் நடந்துகொண்டிருந்த இசை நிகழ்ச்சியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வரவழைத்து எம்மை வெளியேற்றவும் முயற்சி செய்தனர். அந்த முயற்சி தோல்வியடைந்தபோது , ‘வெளியேறா விட்டால் பொலிஸாரை அழைத்து உங்களை தூக்கிப்போட வேண்டிவரும்’ என ஒருவர் மிரட்டினார். அதேவேளை செனட்டரை பின்வழியாக அழைத்துசென்றுவிட்டனர். செனட்டரோடே நாம் பேச முனைந்தோம். அவரே சென்ற பின்னர் நாம் ஏன் அங்கு நிற்கவேண்டுமென நினைத்து வெளியேறிச் விட்டோம். நாம் அங்கிருந்து சென்ற பின்னர் பொலிஸார் வந்தார்கள் என்று நான் கேள்விப்பட்டேன்.

ஒருவேளை இவர்கள் அனுமதித்திருந்தால் செனட்டர் எங்களுடன் பேசியிருப்பார் என்ற எனக்கு தோன்றுகிறது.

செனட்டரைச் சந்திக்க வழியேற்படுத்தித் தரலாம் என்று கூறி அந்தச் சங்கத்தின் தலைவர் என தன்னை அடையாளப்படுத்திய ஒருவர் தனது தொலைபேசி இலக்கத்தை தந்தார். இரண்டொருநாட்களுக்கு பின்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். ஆனால் இதுவரை பதில் இல்லை. ஒரு தமிழ்ச் சங்கத்தின் தலைவரே எங்களின் அழைப்பை ஏற்கவில்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் செனட்டரை அணுகுவது எவ்வளவு கடினம் என்று எண்ணிப்பாருங்கள்.

விக்டோரியா தமிழ் கலாசார மண்டபத்தில் பங்குதாரர்களாக அகதிகளும் இருக்கின்றனர். வரிசெலுத்துபவர்களின் பணத்திலிருந்து மத்திய - மாநில அரசுகள் இந்த மண்டபத்துக்கு நிதியளித்துள்ளன. ஆனால் இந்த மண்டபம் சமூக மண்டபமாக இயங்குவதாகத் தெரியவில்லை.

இப்போது எனக்குள்ள கேள்வி, தமிழ்மக்களுக்காக குரல் கொடுத்த மாமனிதனின் நினைவுகூரலில் தமிழ் அகதிகள் விரட்டப்படுவது சரியா?

ஒடுக்கப்பட்ட பூர்வகுடி மக்களுக்காக ஆதரவளிக்கக் கோரும் தமிழ்ச்சங்கம், இலங்கையில் ஒடுக்கப்பட்ட வன்முறைக்குள் சிக்குண்டு, சிதறுண்டு பல நாடுகளில் தஞ்சமடைந்து இன்று ஆஸ்திரேலியாவில் நிரந்தர வாழ்வுக்காகப் போராடும் அகதிகளை விரட்டுவது சரியா..?”-

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
**ஆசிரியர்பீடம், எதிரொலி**



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# விக்டோரியா தமிழ்க் கலாசார மண்டபத்தில் இருந்து அகதிகள் விரட்டப்பட்டனரா?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தனக்கு அன்றைய நாளில் நிகழ்ந்தவற்றைப் பதிவு செய்தார் ஈழ ஏதிலியான பிரசாந் குமரவேல்.

பிரசாந் குமரவேல் தற்போது தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றுபவர். வைத்தியராக வேண்டும் என்பதே அவரது குறிக்கோள்.

“நானும் எனது பெற்றோரும் 1998 ஆம் ஆண்டு முதல் சுமார் 15 வருடங்களாக தமிழ்நாட்டு அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்தோம். 2012 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா வந்தோம். எங்களுக்கு நிரந்தர வதிவிட விசா இல்லை. எனது கல்லூரி நண்பர்கள் 20 மணி நேரம் மட்டுமே வேலை செய்வார்கள். படிப்பார்கள். அரசு பணம் கொடுக்கிறது. எனக்கு அப்படி அல்ல. நான் படிப்பதற்கு 70 ஆயிரம் டொலர் கட்டவேண்டும். இரண்டு வேலைகள் செய்யவேண்டும். படிப்பதற்கு என்று நேரம் ஒதுக்குவதே கடினம். இப்படிப் போராடித்தான் நான் படிக்கிறேன். என்னைப் போல பல பேர் இப்படித்தான் இருக்கிறார்கள்.என் பெற்றோரும் அகதிகள், நானும் அகதி.இதற்கு முற்றுப்புள்ளி என்னோடேயே வைக்கவேண்டும். எப்போதாவது ஒருநாள் நிம்மதியாக துங்கமாட்டோமா என்ற ஏக்கமே எங்களை இந்தப் போராட்டத்துக்குள் தள்ளிவிடுகிறது” என்கிறார் பிரசாந்.

### குரல்-2

“என்னுடைய அம்மா நீண்ட தூரம் நடக்கின்றார், எங்களுக்கான விடிவுக்காக. அந்தத் தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வுக்குப் போனோம். அங்கு இருந்த ஒரு சிலர் எங்களை ’உள்ளே போக முடியாது’ என்று சொன்னார்கள். அங்கிருந்தவர்கள் எங்களோடு கதைத்த விதம் பிழையாக இருந்தது. அவர்கள் என் அம்மாவோடு போனவர்களைப் பற்றி சில வார்த்தைகள் சொன்னார்கள். எனக்கு கவலையாக இருந்தது. அங்கிருந்த ஒருவர் அதிபர் என்று சொன்னார்கள். ஆனால் அவர் அதிபராக நடந்துகொள்ளவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. நான் ஆஸ்திரேலியாவில் 11 வருடங்களாக இருக்கின்றேன். நான் பல நிகழ்வுக்குச் சென்றிருக்கிறேன். பாடசாலையில் எனது நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு என்னைப் பற்றித் தெரியும். அவர்கள் என்னை மரியாதையாகவே நடத்துகின்றனர். எனக்கு இது முதல் அனுபவம். இந்த நிகழ்வில் எங்களை அவமானப்படுத்தினார்கள். அவர்கள் தமிழ்ச் சங்கம் என்று பயன்படுத்துவது தவறு என நான் நினைக்கின்றேன். ஏனெனில் அவர்கள் தமிழர்களான, தமிழ் ஏதிலிகளான எங்களை உள்ளே அனுமதிக்கவில்லை. ஆகவே அவர்கள் அதன் பெயரை சிட்டிசன் தமிழ்ச் சங்கம் என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்”- என்று 18 வயது நிரம்பிய பாடசாலை செல்லும் மாணவி ஒருவர் தெரிவித்தார்.

### குரல்-3

“நான் 1985 ஆம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்து இலங்கையின் பல பகுதியில் உள்ளூரில் அகதியாக வாழ்ந்திருக்கிறேன். திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து சுமார் 3 மாதங்களாக காட்டுக்குள்ளேயே வாழ்ந்திருக்கிறோம். அதுமட்டுமின்றி நான் ஆஸ்திரேலியா வரும் வரை நான் எனது சொந்த வீட்டில் உறங்கியதில்லை. எங்களின் இந்த இடப்பெயர்வு வாழ்க்கை உள்ளூருடன் முடிந்துவிடவில்லை. தமிழ்நாட்டு அகதி முகாம், பின்னர் ஆஸ்திரேலியா வந்து பப்புவா நியுகினி என பல தடுப்பு முகாம் வாழ்க்கையை அனுபவித்தும் இன்னும் நிம்மதியான வாழ்க்கை கிடைக்கவில்லை. ஆஸ்திரேலியா வந்த பின்னர் தான் ஒரு நாளைக்கு 15 மாத்திரைகளை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். எங்களின் மனஉளைச்சல்களைச் சொல்லி அழுவதற்கான இடம் தெரியவில்லை. அரசியல்வாதிகளை சந்திக்க வழி தெரியவில்லை. நாங்களும் பல இடங்களில போராடுகிறோம். ஆனால் எப்போதும் யாரையும் சந்திக்க முடிவதில்லை. இந்நிலையில் தான் விக்டோரியாத் தமிழ்ச் சங்கத்தில் நடக்கும் நிகழ்வுக்கு செனட்டர் ஒருவர் வருகிறார், அவரிடம் நாம் ஒரு



கோரிக்கையை முன்வைப்போம் என்று எண்ணினோமே தவிர ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எம்மிடம் இருக்கவில்லை.

“நாங்கள் குறித்த நிகழ்வுக்குச் சென்ற வேளையில் வாசலில் வைத்தே மறிக்கப்பட்டோம். அந்த வேளையில் நாம் செனட்டரிடம் எமது பிரச்சினை குறித்துப் பேச வேண்டும் என்று அங்கிருந்த தமிழ்ச் சங்க நிர்வாகிகளிடம் கேட்டோம். அதற்கு அவர்கள்,” இந்த நிகழ்வில் நீங்கள் அவருடன் பேச முடியாது . அவர்களிடம் நீங்கள் தனிப்பட அனுமதியைக் கோரி அங்கு போய் பேசுங்கள்” என்று கறாரான தொனியில் தெரிவித்திருந்தனர். நான் அவரிடம் கேட்டேன் ’நீங்களே இப்படிச் சொல்லலாமா? எங்களுக்கு உதவி செய்யுங்கள். 22 பெண்கள் எங்களின் விடிவுக்காக நடக்கின்றனர் ”என்று சொல்லி முடிக்க முன்னரே அங்கிருந்த நிர்வாகி ஒருவர், “அதுகளுக்கு விசர்” என்று கூற, நாங்கள் திரும்பச் சொன்னோம் “நீங்கள் ஒரு தமிழராக இருந்து இவ்வாறு பேசலாமா ?”. அதன் பின்னர் வெளியே வந்து நின்றோம். பின்னர் கொஞ்ச நேரத்தில் மீண்டும் உள்ளே போயிருந்தோம். அங்கு எங்களைச் சுற்றி நாலைந்து பேர் வட்டம் போட்டுக் கொண்டேயிருந்தனர். நாம் அமைதியான முறையில் தான் இருந்தோம். எந்தவிதமான கோஷங்களோ முழக்கங்களோ போடவில்லை. செனட்டரின் பேச்சு முடிந்த பின்னர் ’நாம் ஒரு 5 நிமிடங்கள் பேச வேண்டும்’ என்று கேட்டோம். அதற்குச் சங்கத்தின் நிர்வாகிகள் விடவில்லை. அதுமட்டுமின்றி அங்கிருந்தவர்களைத் தள்ளி வெளியேற்ற முயற்சித்தனர். நாம் எந்த வன்முறையையும் பின்பற்ற வில்லை. ஆனால் பொலிஸாரை அழைப்பித்து எங்களை வெளியேற்ற முனைந்தமை பொலிஸார் வந்த பின்னரே எனக்குத் தெரியும் . பொலிஸார் வர முன்னரே நாம் வெளியேறி விட்டோம். பல அகதிகள் விசா இன்றி நிர்க்கதியில் இருக்கின்றோம். இந்த நிலையில் பொலிஸாரை வரவழைப்பது ஒரு தமிழ் சார்ந்த அமைப்பின் சரியான போக்கா? இந்தப் பதிவில் என்னுடைய பெயரைப் போட வேண்டாம் . காரணம் , நேரடியாகவே எம்மைக் காட்டிக்கொடுக்கின்றனர். பெயரைப் போட்டால் என்ன நடக்குமென நீங்களே யோசித்து பாருங்கள்”- என்றார் அந்நிகழ்வில் கலந்து கொண்ட குடும்பத் தலைவி ஒருவர்.

### குரல்-4

“நானும் எனது மகளும் சுமார் 12 வருடங்களாக நிர்க்கதியான நிலையில் இருக்கின்றோம். வைத்தியத் துறையில் கல்வியையும் தொடர முடியவில்லை - நிரந்தர வதிவிடமும் இல்லை என்ற நிலையில், நிம்மதியான வாழ்வைத் தேடி எனது மகள் மெல்பேர்ண் தொடக்கம் கன்பரா வரை நடந்துகொண்டிருக்கின்றார். இந்த நேரத்தில் தான்’ விக்டோரியா தமிழ்ச் சங்கத்தில் நடக்கும் நிகழ்வுக்கு செனட்டர் ஒருவர் வருகிறார், அவருக்கு எங்களின் நிலைமையை நேரடியாக சொல்ல வாய்ப்பு கிடைக்கும்’ என்று சென்றோம். நாங்கள் உள்ளே செல்லும் வாசலில் வைத்தே தடுத்து நிறுத்தப்பட்டோம். அங்கு தடுத்தோர் பலர் ’உங்களுக்கு விசா நிராகரிக்கப்பட்டது சரி. அகதிகளுக்கு விசா கொடுத்தாச்சு தானே. வெளியே செல்லுங்கள் ’என்று விரட்டினர்’ - சுரேன் ஜீவரட்ணம் என்பவரே இவ்வாறு தெரிவித்தார்.

விக்டோரிய தமிழ் சங்கத்தின் நிர்வாகிகளில் ஒருவரான திரு. பரமநாதனிடம் தொடர்புகொண்டு இந்தச் சம்பவம் குறித்து வினாவுதற்காக எதிரொலி சார்பாக நேரம் கோரப்பட்டது. நேரம் தரப்பட்ட பின்னர் அவர் ஒரு குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் குறுஞ்செய்தியில்,

‘தமிழ்ச் சமூகம் சார்பாக இரண்டு முக்கியமான பிரமுகர்களை இந்த நிகழ்வுக்கு அழைத்திருந்திருந்தோம். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் செனட்டர் தனக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடக்கும் என எதிர்பார்த்திருக்கவில்லை. அதேவேளை, இந்த நிகழ்வில் தமிழர்கள் மட்டும் கலந்து கொள்ளவில்லை. பிற இனத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். அங்கு வந்திருந்த அகதிகள் பதாகைகளைத் தாங்கியிருந்தனர். எனது கருத்தின்படி கன்பரா சென்று அங்கு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும். நாங்கள் நடந்து சென்று ஊடகத்தின் பார்வையை பெற வேண்டும். அத்துடன ஒரு மாமனிதனின் நினைவு நிகழ்வில் இப்படி ஆர்ப்பாட்டம் செய்வது நியாயமானதா.? அன்றைய நாளில் நடந்த நிகழ்வு எனக்கு கவலையளிக்கிறது. அத்துடன் இந்தச் சம்பவம் குறித்து மேலும் கலந்துரையாட விரும்பவில்லை” இதுதான் அந்தக் குறுஞ்செய்தி.

(இந்தச்சம்பவம் குறித்து ஏதேனும் மாற்றுக்கருத்துகள் இருப்பின் எதிரொலிக்கு மின்னஞ்சல் மூலம் எழுதியனுப்பினால் பிரசுரிக்கப்படும்)



# தலைமுறை தாண்டியும் அகதிகளாக வாழும் தமிழர்கள்

● சுகந்தன்

இலங்கையில் நிகழ்ந்த கொடிய யுத்தம் முடிவுற்று 14 நான்கு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், இன்றும் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்துக்கு வழிவகுத்த எந்தப் பிரச்சினையும் முடிவுக்கு வரவில்லை. தமிழர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றனர். ஒரு நீதிபதி கூட, அவர் தமிழர் என்பதால் தனது தீர்ப்பை சட்டத்தின் அடிப்படையில் வழங்க முடியாத நிலையில் பதவியை இராஜினமாச் செய்கின்றார் நாடளுமன்ற உறுப்பினர் மீது இராணுவம் மற்றும் பொலிஸார் முன்னிலையில் வைத்து பேரினவாதிகள் தாக்குதல் நடத்துகின்றனர். சமூகப்போராளிகளுக்கு எதிராக புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். நிலஆக்கிரமிப்பை திட்டமிட்டு சிங்களப் பேரினவாத அரசே முன்னின்று நடத்துகிறது. இது ஒருபுறமிருக்க, யுத்தம் நடைபெற்ற காலத்திலேயே நாட்டைவிட்டு தப்பித்து பல நாடுகளில் அகதி முகாம் வாழ்க்கையை வாழ்ந்து, அங்கிருந்து நிரந்தவாழ்வுக்காக ஆஸ்திரேலியா வந்தவர்களை "நீங்கள் அகதிகள் இல்லை" என்று சுமார் 12 ஆயிரம் பேரை நிர்க்கதியான நிலைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது ஆஸ்திரேலிய அரசு.

தங்களின் பக்கம் அரசின் கடைக்கண்பார்வை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல வழிகளில் அகதிகள் போராடிவருகின்றனர். அவ்வாறான போரட்டங்களின் வழியே 22 பெண்கள் மெல்பேர்ண் முதல் கன்பரா வரை நடந்து சென்று தங்களுக்கான நிரந்த விசாவை வழங்குமாறு விடிவுக்கான நீண்ட நடையை தொடர்கின்றனர்.

விடிவுக்கான நீண்ட நடையில் உள்ள பெண்களில் சிலர் தாங்கள் ஏன் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தோம்?, போராட்டத்தில் தாங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எவை? என்பன குறித்து எதிரொலியுடன் கலந்துரையாடினர்.

"என்னுடைய பெயர் ரதி. நான் இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவள். இலங்கையில் இருக்கும் போது பட்டப்படிப்பை தொடர்ந்து கொண்டிருக்கும் போது எனது கணவருக்கு இலங்கை அரசால் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, நாட்டை விட்டு வெளியேறி தமிழ்நாட்டு அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்தோம். தமிழ்நாட்டு அகதி முகாம் என்பது கிட்டத்தட்ட ஒரு சிறை வாழ்வுதான். இந்தியப் புலனாய்வுப் பிரிவினரின் தொல்லைகள் அதிகம். எங்களை அங்கும் கூட 'அகதி நாய்கள்' என்று திட்டுவார்கள். அதுமட்டுமல்ல பலர் தலைமுறைகளாகத் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் அகதிகளாகவே இருக்கின்றனர். நாங்கள் அடிமையாக வாழ விரும்பவில்லை. ஆகவே தான் நிரந்தர நிம்மதியான ஒரு வாழ்க்கையை நோக்கி ஆஸ்திரேலியா வந்தோம்.

ஆஸ்திரேலியா வந்து சுமார் 12 வருடங்களை எட்டியுள்ளது. எங்களுக்கான தீர்வுகள் ஏதும் இல்லை. எனக்கு இரண்டு பெண்குழந்தைகள் உள்ளனர். அவர்களை விட்டு விட்டுத்தான் வந்துள்ளேன். அவர்களின் எதிர்காலமாவது நிம்மதியாக இருக்க வேண்டும். இந்த நீண்டநடை மூலமாவது தீர்வு கிடைக்கவேண்டும். அத்துடன், வரும் வழிகள் மிக இலகுவானதல்ல. நாம் தெரிவு செய்த பாதைகள் பெரும்பாலும் உட் பகுதிகள். காட்டுப்பகுதிகள், பாம்புகள், சகதிகள், மழை, வெயில் என்ற நெருக்கடிக்குள் தான் நடந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த விடிவுக்கான நடைபயணத்தில் இணைந்திருக்கும் 22 பெண்களும் எமக்கான தீர்வுக்கான மட்டும் போராடவில்லை.

எங்கள் 22 பேரின் போராட்டத்தின் மூலம் விசா மறுக்கப்பட்டு நிர்க்கதியாக ஆஸ்திரேலியாவில் ஏக்கத்துடன் இருக்கும் 12 ஆயிரம் ஏதிலிகளின் வாழ்க்கையையும் ஒளிமயமானதாக மாற்ற வேண்டும். வெற்றியோ, தோல்வியே எது கிடைத்தாலும் பரவாயில்லை,எமது இலக்கு நோக்கி நாம் போராடுவோம்.

அதேவேளை ஆஸ்திரேலியா வந்தும் நாங்கள் சமூகத்துக்கான தொண்டாற்றியுள்ளோம். நான் விக்டோரியா தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பள்ளியின் ஜீலோங் வளாகத்தின் ஆசிரியர் மற்றும் இணைப்பாளராகவும் இருந்திருக்கிறேன்" - இவ்வாறு தெரிவித்தார் ரதி.

" என்னுடைய பெயர் கலா. என்னுடைய சொந்த இடம் வவுனியா. நாட்டிலிருந்து நேரடியாகவே ஆஸ்திரேலியாவுக்கு படகேறி இரண்டு பெண் குழந்தைகளுடன் தான் ஆஸ்திரேலியாவுக்கு வந்தேன். வரும் போதே எனது கணவரையும் இலங்கை இராணுவம் கைது செய்திருந்தது. நான் அங்கு வாழமுடியாத சூழ்நிலையில் தான் ,தப்பித்து பிள்ளைகளுடன் ஆஸ்திரேலியாவுக்கு வந்தேன். இங்கு வந்து 11 வருடங்கள் கடந்து விட்டன. நிம்மதியான வாழ்வுக்கான போராட்டத்தை பல வழிகளில் முன்னெடுத்துவிட்டோம். தற்போது இந்த நீண்ட நடை ஊடாக எங்களுக்கான விடிவுக்காக நடக்கிறோம். ஆஸ்திரேலியா வந்த பின்னர் எங்களின் எதிர்காலம் குறித்து யோசித்து யோசித்தே எனக்கு பல நோய்கள் வந்துவிட்டன. என் பிள்ளைகளாவது நிரந்தரமான நிம்மதியான வாழ்க்கையை வாழட்டுமே என்பதற்காகவே எங்களின் இந்த நடை தொடர்கிறது'- என்கிறார் கலா.

"பாம்புகள் நிறைந்த காடுகளை கடந்து நடக்கிறோம். கால்களுக்குள் பல்வகைப் பாம்புகளும் இடறுப்படுகின்றன. நாகம் படம் எடுத்து சீறுகிறது. இவ்வாறான பாதைகள் ஊடாகத்தான் நாம் எங்களின் நிரந்தர வாழ்வுக்காகப் போராடுகிறோம். நாங்கள் பிரதான பாதைகளை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. உட்பாதைகள் ஊடாகவே பெரும்பாலும் செல்கிறோம்.

எங்களில் பலரின் கால்கள் வெடித்துவிட்டன. ஒரு சிலரின் கால்களில் நகங்கள் கழன்றுவிடும் என நினைக்கிறோம். ஆனாலும் அவர்கள் அனைவரும் அடுத்த நாள் நடப்பதற்காக ஆயத்தமாகிவிடுவர். எமக்கான , எம்மைப் போன்ற அகதியாக அல்லற்படுவோரின் நிம்மதியான வாழ்வே எங்களின் முதல் நோக்கம். அதற்காக நாம் இவ்வாறான இன்னல்களைக் கடந்து தான் செல்லவேண்டும்." - கீதா என்ற மூன்று பிள்ளைகளின் தாய் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த சந்திரவதனி என்ற குடும்பத்தலைவி தனது அகதி வாழ்க்கையை இவ்வாறு பதிவு செய்கிறார்.

" இலங்கையில் இருந்து எனது குடும்பம் தப்பித்து இந்திய அகதிமுகாம் வரும் போது எனது மூத்த மகன் பிறப்பதற்கு பத்து நாட்களே இருந்தன. உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாத எவராவது தனது குழந்தை பிறக்க 10 நாட்கள் இருக்கும் போது நாட்டை விட்டுத் தப்பித்து செல்வார்களா.?

எனக்கு நினைவு தெரிந்து இன்றுவரை நான் நிம்மதியை அனுபவித்தது இல்லை.

இந்திய அகதி முகாமில் 6 வருடங்கள் இருந்தோம். ஆஸ்திரேலியாவுக்கு வந்து சுமார் 11 வருடங்களாகிவிட்டன. அகதி என்ற பெயர் இல்லாமல் எந்த நாட்டில் குடியுரிமையுடன் வாழப்போகிறோம்? எங்களின் அம்மா அப்பாவும் அகதியாக எங்களை ஊர் ஊராக தான் கூட்டிக்கொண்டு திரிந்தார்கள். அதேபோல நாங்களும் எங்களின் பிள்ளைகளை அகதியாகக் கூட்டிக்கொண்டு திரிகிறோம். எங்களின் பிள்ளைகளின் வாழ்க்கையில் அகதி என்ற பெயர் இருக்கக் கூடாது. எனக்கு 2 வயதுப் பிள்ளை இருக்கிறது. அந்தக் குழந்தை ஒரு மாதம் தனியாக தவித்துக்கொண்டிருக்கிறது. எனது பிள்ளையுடன் ஒவ்வொருநாளும் பேசுவதில்லை. பிள்ளை என்னை அழைப்பது எனக்கு பெரிய வலியைக் கொடுக்கிறது. அதனால் பேசுவதைத் தவிர்க்கிறேன். அவன் ஒருமாதம் தனியாக இருக்கட்டும். அவனுக்காகவும் 10 ஆயிரம் அகதிகளுக்கும் நிரந்தர வாழ்க்கையாக எங்கள் நடைபயணம் மாறவேண்டும்.

இந்த நீண்டதூரப்பாதை மிகவும் கடினமாக உள்ளது. இந்த 11 வருடங்களில் நாங்கள் சுமந்து கொண்டிருக்கும் வலிகளை விட இதுவொன்றும் பெரிய வலியல்ல"- என்று ஆரம்பம் முதல் கடைசிவரை கண்ணீருடன் கதைத்து முடித்தார் சந்திரா.

# போர் இன்னும் ஓயவில்லை!



தன் நாட்டின் மீது ஹமாஸ் போராளிகள்குழு நடத்திய தாக்குதல்களால் கடுப்பாகியுள்ள இஸ்ரேல், ஹமாஸ் அமைப்புக்கு முடிவுகட்டுவதற்கான தாக்குதல் வேட்டையை துரிதப்படுத்தியுள்ளது. பேச்சுமூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு விடுக்கப்பட்டுள்ள அழைப்புகளை இஸ்ரேல் நிராகரித்துள்ளதால் போர் நிலை உக்கிரமடைந்துள்ளது.

பலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து மோதல் இடம்பெற்றுவரும் நிலையிலேயே கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி, காசா பகுதியில் இருந்து ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல்மீது சரமாரியாகத் தாக்குதல் தொடுத்தனர்.

'ஒப்ரேஷன் அல் அக்ஷா புயல்' என்ற பெயரில் இந்தத் தாக்குதலை ஹமாஸ் அமைப்பினர் முன்னெடுத்தனர். ரொக்கெட் மழை பொழிந்து ஒருபக்கம் தாக்கியபடி, மற்றொரு பக்கம் ஹமாஸ் குழுவினர் இஸ்ரேலுக்குள் ஊடுருவி சரமாரித் தாக்குதலை தொடுத்தனர். 20 நிமிடத்துக்குள் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரொக்கெட்டுகள் ஏவப்பட்டுள்ளன. முன்னெப்போதும் இல்லாத வகையிலான ஹமாஸின் இந்தத் தாக்குதலால் இஸ்ரேல் திக்குமுக்காடிப்போனது.

இஸ்ரேல்மீது ஹமாஸ் குழுவினர் தொடுத்த இந்தத் தாக்குதலும், அதன் பின்னரான போர் சூழ்நிலையுமே இன்றைய உலகில் பேசுபொருளாக மாறியுள்ளது.

### மொசாட் உளவு பிரிவுக்கு மரண அடி

இஸ்ரேலின் படைபலம் பலமாக இருப்பதற்கு மிகமுக்கியமான காரணமே மொசாட் என்ற உளவுப்பிரிவுதான். இப்படிப்பட்ட உளவு அமைப்பை தாண்டி ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது. இதனை முன்கூட்டியே அறியவில்லை என்பது மொசாட்டின் மிகப்பெரிய தோல்வியாகவும், அதன் வரலாற்றில் கரும்புள்ளியாகவும் அமைந்துள்ளது.

இஸ்ரேல் நாடு உருவானபோது ஏனைய நாடுகளின் தாக்குதலை சமாளிக்க உருவாக்கப்பட்ட உளவு அமைப்புதான் மொசாட். தொடக்கத்தில் உள்நாட்டில் மட்டுமே செயல்பட்ட மொசாட் அதன் பின்னர் வெளிநாடுகளிலும் ஊடுருவி அந்நாடுகளின் திட்டங்களை அறிந்து இஸ்ரேலுக்கு ஏதும் அச்சுறுத்தல் வந்தால் உடனடியாக அரசை உஷார்படுத்தி வந்தது. பின்நாட்களில் சிறந்த இராணுவ அதிகாரிகள் அக்குழுவில் சேர்க்கப்பட்டதும் அதன் பலம் பன்மடங்கு உயர்ந்தது. அதற்கு ஒரு சான்றாக அமைந்தது உகாண்டா விமான நிலைய அதிரடி மீட்பு நடவடிக்கை.

இஸ்ரேலுடன் நட்பு நாடாக இருந்த உகாண்டா, பின் நாட்களில் பலஸ்தீனிய ஆதரவு நாடாக மாறியது. அப்படி மாறிய நிலையில் இஸ்ரேலியர்கள் பயணித்த விமானத்தை 4 பேர் கொண்ட பலஸ்தீனிய ஆயுதப் படை கடத்தி உகாண்டாவுக்கு எடுத்துச் சென்றது.

பிணைக் கைதிகளாக பிடிக்கப்பட்ட மக்களை விடுவிக்க இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீனியர்களை விடுவிக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஒரு புறம் பேச்சை முன்னெடுத்த இஸ்ரேல் அரசு , மறுபுறம் மக்களை மீட்க மொசாட் அமைப்புக்கு உத்தரவிட்டது.

அதன்படி, அரபு நாடுகளின் ரேடார்களில் சிக்காமல் விமானத்தில் பறந்த மொசாட் அதிகாரிகள், உகாண்டாவில் தரையிறங்கி அந்நாட்டு பாதுகாப்புப் படையையும், பலஸ்தீனிய ஆயுதப்படையினரையும் சுட்டு வீழ்த்தி தங்கள் நாட்டு மக்களை பத்திரமாக மீட்டு வந்தனர்.

இது மட்டுமின்றி வெளிநாட்டு அரசியலில் உளவு பார்ப்பதையும் மொசாட் குழு தொடர்ந்து வருகிறது. மக்களோடு மக்களாக உள்ள உளவுப் படையினர் நாட்டின் முக்கியமான இரகசியங்களையும் தோண்டி எடுக்கும் திறனைக் கொண்டுள்ளனர். இப்படியான உளவுப் பிரிவுக்கு இப்படியொரு தாக்குதல் நடத்தப்படவுள்ளமை குறித்து தகவல் அறியக்கிடைக்காமை பேரதிர்ச்சியாக அமைந்துள்ளது, அதுமட்டுமல்ல மொசாட் தனக்கான கெத்தையும் இழந்துள்ளது.

எட்டுத்திக்கிலும் எதிரிகள் இருக்கின்றனர் என்பதால் எல்லையில் சென்சார் பொருத்தப்பட்ட இரும்புவேலிகள் என பலப்பல பாதுகாப்பு ஏற்பாடுகளை அடுக்கடுக்காக செய்து வைத்திருந்தது இஸ்ரேல். இது அத்தனையையும் தாண்டி இஸ்ரேலில் சரமாரித் தாக்குதலை நடத்தி உலகையே அதிர வைத்துள்ளது ஹமாஸ் அமைப்பு. அமெரிக்காவில் நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு இணையான தாக்குதலாக இது பார்க்கப்படுகிறது.

### பிரச்சினை எங்கு ஆரம்பமானது?
### தீர்வுத் திட்டம் என்ன?

மத்திய கிழக்குப் பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒட்டோமான் பேரரசு முதலாம் உலகப் போரில் வீழ்த்தப்பட்ட பின், அந்தப் பகுதி பிரிட்டனின் ஆளுகைக்குக் கீழ் வந்தது. அதன் பின் அந்தப் பகுதியில் உள்ள பலஸ்தீனத்தில் யூத சிறுபான்மையினரும், அரபுப் பெரும்பான்மையினரும் குடியேறினர்.

பலஸ்தீனத்தில் உள்ள யூதர்களுக்கு, "தேசியப் பகுதி" ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற பொறுப்பை உலக நாடுகள் பிரிட்டனிடம் ஒப்படைத்தன. அப்போது தான் இந்தப் பிரச்சினை தொடங்கியது.

யூதர்களைப் பொறுத்தவரை அந்தப் பகுதி அவர்களுடைய பூர்வீக மண்ணாக இருக்கிறது. ஆனால் பலஸ்தீனிய அரபு மக்களும் அந்தப் பகுதிக்கு சொந்தம் கொண்டாடினர். யூதர்கள் அங்கு குடியேறியதற்கு, பெரும்பான்மையாக இருக்கும் அரபு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதன் பின் யூதர்களுக்கும், அரபு மக்களுக்கும் இடையேயும், பிரிட்டனுக்கு எதிராகவும் வன்முறைகள் வெடித்தன. 1947ஆம் ஆண்டு பலஸ்தீனம் யூதர் பகுதி மற்றும் அரபு மக்களின் பகுதி என இரண்டாக மாற ஐ.நா. வாக்களித்தது. அப்போது ஜெருசலேம் சர்வதேச நகரமானது.

இந்தத் திட்டம் யூதத் தலைவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அரபு மக்கள் தரப்பில் இந்தத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அரபு மக்கள் இந்தத்திட்டத்தை அமுல்படுத்தவும் இல்லை.

இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியாமல் தவித்த பிரிட்டன் ஆட்சியாளர்கள், 1948 ஆம் ஆண்டு அந்த பகுதியைவிட்டு வெளியேறினர். இதையடுத்து யூதத் தலைவர்கள் இஸ்ரேல் என்ற புதிய நாடு உருவானதாக அறிவித்தனர். இஸ்லாமியர்கள் இதனை ஏற்கவில்லை. இதனால் மோதல்கள் தொடர்ந்தன.

பலஸ்தீனிய விடுதலை அமைப்பு (PLO) மற்றும் பலஸ்தீனிய அதிகாரத்தின் முன்னாள் தலைவர் யாசீர் அராபாத், இஸ்ரேல்-பலஸ்தீன மோதலுக்கு இரு நாடு தீர்வு என்ற கருத்தை இறுதியில் ஏற்றுக்கொண்டார். 1990 களில் PLO மற்றும் இஸ்ரேலுக்கு இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் தொடர்ச்சியாக இந்த ஏற்பு ஒஸ்லோ உடன்படிக்கையின் வடிவத்தில் வந்தது. இதற்காகவே அரபாத்துக்கு அமைதிக்கான நோபல் பரிசு 1994 இல் வழங்கப்பட்டது.

ஒஸ்லோ உடன்படிக்கைகள் மேற்குக் கரை மற்றும் காசா பகுதியின் சில பகுதிகளில் பலஸ்தீனிய அதிகாரத்தை நிறுவுவதன் மூலம் இருநாடு என்ற தீர்வை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு படிப்படியான செயல்முறைக்கு அடித்தளம் அமைத்தது.

2 state solution என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் தீர்வை ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்புக்கள் நிராகரித்ததே பிரச்சினைக்கு காரணமாக அமைந்துள்ளது. இஸ்ரேல் எனும் ஒரு நாட்டையே அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அங்கு அமைதி திரும்ப வேண்டுமென்றால் இந்த இரு நாட்டுத் தீர்வே ஒரு தீர்வாக அமையும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

### ஹமாஸ் அமைப்பின் பின்னணி

ஹமாஸ் என்ற இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பலஸ்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987 ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.

ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது. ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது இராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.

ஆனால் 2005 ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது. 2006 ஆம் ஆண்டு நடந்த பலஸ்தீனத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. ஜனாதிபதி முகமது அப்பாஸின் பதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.

அதன்பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் ஹமாஸ் ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களை நிறுத்துவதற்காகவும் இஸ்ரேல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஹமாஸ் இயக்கத்தை முழுமையாகவும், சில நேரங்களில் அதன் இராணுவப் பிரிவை மட்டும் பயங்கரவாத இயக்கமாகவும் இஸ்ரேலும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் ஆகிய நாடுகளும் பட்டியலிடுகின்றன.

### இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில்
### உலக நாடுகள் எந்த பக்கம்?

ஹமாஸ் அமைப்புக்கு ஈரான் வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்துள்ளது. லெபனானும், அங்கு இயங்கும் ஹிஸ்புல்லா அமைப்பும் ஆதரவு தெரிவித்துள்ளன. அதேபோல யேமன், பாகிஸ்தான் போன்ற நாடுகளும், சில இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளும் ஹமாஸுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஹமாஸுக்கான ஆயுத, தொழில்நுட்ப உதவிகளை ஈரான்தான் வழங்கியது என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்து, கப்பலையும் அனுப்பி வைத்துள்ளது. மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேல் பக்கம் நிற்கின்றன. ஹமாஸின் தாக்குதலை ஆஸ்திரேலியா வன்மையாகக் கண்டித்துள்ளது. இஸ்ரேலுக்கான தமது ஆதரவையும் கன்பரா வெளியிட்டுள்ளது.

பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுக்கும் சவூதி, எகிப்து, கட்டார் உள்ளிட்ட நாடுகள் ஹமாஸ் விவகாரத்தில் நடுநிலைப்போக்கையே கடைபிடித்துவருகின்றன. போர் முடிவுக்கு வரவேண்டும் என்பதையும் வலியுறுத்திவருகின்றன.

### இழப்பும், தாக்கமும்

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதல்களில் வெளிநாட்டவர்கள் உட்பட இஸ்ரேலியர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். பெருமளவு சொத்து இழப்பும் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலில் வாழும் ஆஸ்திரேலியர் எவரும் இந்தக்கட்டுரை அச்சுக்குச் செல்லும்வரை உயிரிழக்கவில்லை. ஆஸ்திரேலியர்கள் காயமடைந்த சம்பவங்களும் பதிவாகவில்லை.

ஹமாஸ் அமைப்புக்கு எதிரான போர் என இஸ்ரேல் முன்னெடுக்கும் நடவடிக்கையால் காசா முனையில் பல அப்பாவிகளும் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். சர்வதேசச் சந்தையில் எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது.

தொகுப்பு - டிலக்ஷன்


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# கண்ணீரில் கரையும் கல்வி

● ஜே.ஜே

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாக வந்து 11 வருடங்கள் கடந்த நிலையிலும் நிரந்தர வாழ்கைக்கான போரட்டத்தில் சுமார் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தங்களுக்கான நிரந்தர வாழ்வுக்காக பல வழிகளில் போராடிக்கொண்டிருக்கின்றனர். அத்தகைய போராட்டங்களில் ஒன்றான, விடிவுக்கான நீண்ட நடையை மேற்கொண்டிருக்கும் 22 பெண்களில் ஒருவர்தான் ஹரினி.

பத்து வயதில் தனது தாய் மற்றும் சகோதரர்களை தமிழ்நாட்டு அகதி முகாமில் விட்டுவிட்டு தந்தையுடன் படகேறி ஆஸ்திரேலியா வந்தவர் தான் ஹரினி. தான் ஏன் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகிறேன் என்பது குறித்து எதிரொலியுடன் அவர் பகிர்நது கொண்டார்.. இந்த நேர்காணலைச் செய்யும் போது நீண்ட தூரம் நடந்த பின்னர் மாலை வேளை இளைப்பாறும் தருணத்தில் தனது களைப்பையும் பொருட்படுத்தாது எதிரொலியுடன் பேசத்தொடங்கினார்.



"பத்துவயதில் ஆஸ்திரேலியாவுக்கு அப்பாவுடன் வந்தேன். எனது அம்மா ,அண்ணா ,அக்கா ஆகியோரை இந்திய அகதி முகாமில் விட்டுவிட்டு வந்தோம். அனைவருக்கும் காசு கட்ட முடியாத நிலை என்பாதால் தான் அப்பா என்னை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். நான் அப்போது சின்னப்பிள்ளை என்பதால் எனக்கு விபரம் தெரியாது. நான் அம்மாவையும் சகோதரர்களையும் இவ்வளவு காலம் பிரிவேன் என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. வருடங்கள் செல்ல செல்ல அம்மாவை எப்போது பார்ப்போம் என்று ஏங்கி ஏங்கியே 11 வருடங்களை எட்டி நிற்கின்றோம். மனதுக்குள் அழுது அழுது செத்துபோய் விட்டோம்"- என்று கனத்த குரலுடன் மீண்டும் தனது நிலையைத் தெளிவுபடுத்துகிறார் ஹரினி.

" இலங்கையில் நாங்கள் திருகோணமலை திருக்கடலூரில் இருந்தோம். திருகோணமலையில் அப்பா எதிர்கொண்ட இராணுவக் கொடுமைகளில் இருந்து தப்பித்து 2006 ஆம் ஆண்டு படகுவழி மூலம் இந்தியா சென்றோம். அங்கு ஒசூர் என்ற அகதி முகாமில் நாங்கள் அடைக்கப்பட்டோம். அப்போது எனக்கு மூன்றரை வயதுதான். நான் இப்போது சொல்லும் அனைத்து விடயங்களும் எனக்கு அம்மா சொல்லியுள்ளார். எனக்கு அப்போது சின்ன வயது . அதனால் பெரிதளவில் இலங்கையில் நடந்த பிரச்சினை குறித்து தெரியாது. ஆனால் எனக்கு அப்பப்பா (அப்பாவின் அப்பா ) எனது பெற்றோர் இலங்கையில் எதிர்கொண்ட பலவிடயங்களை சொல்லியுள்ளார் . இந்தியாவில் கூட அதிகாரிகள் மூலம் பல தொல்லைகள் இருந்தன. பல சோதனைகள் நடந்தன. இந்தியப் புலனாய்வுப் பிரிவினரால் அம்மா, அப்பா ஆகியோர் அடிக்கடி விசாரிக்கப்பட்டமை எனக்கு நினைவில் உள்ளது. கல்வியைக் கூட ஒரு அளவுக்கு மேல் அங்கு தொடர முடியாது." என்று தனக்குத் தெரிந்த இலங்கை இந்திய நிலைவரங்களைத் தெரிவித்தார் ஹரினி,

" இங்கு வாழும் பல குடும்பங்களைப் பார்க்கும் போது எப்போது அவர்களைப் போன்று நாமும் சேர்ந்து வாழ்வோம்? என்ற ஏக்கமே எனக்கும் அப்பாவுக்கும் தோன்றும்." என்று தனது கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னார் ஹரினி.

"நான் தற்போது bio medical siccence bachular படிச்சு முடிக்க இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. பல்கலைக்கழகத்துக்கு பணம் கட்ட முடியாமையால் என்னை நிறுத்திவிட்டார். மருத்துவத்துறைக்குள் செல்வதற்கான தேர்வு எழுதிவிட்டேன். அதில் சித்தியுமடைந்து விட்டேன். ஆனால், காசு கட்ட முடியவில்லை: படிக்கமுடியவில்லை. சுமார் 70 வீதமான காசை அப்பாதான் கட்டி முடித்தார். அப்பா மூன்று வேலை செய்தார். அதன் ஊடாக பெற்ற காசில் தான் என்னைப் படிக்க வைத்தார். ஆனால் அப்பா வேலை செய்த இடத்தில் நடந்த விபத்தில் அவருடைய கால் பகுதி பாதிக்கப்பட்டதால், அவரால் எந்த வேலைக்கும் போக முடியவில்லை. அந்தக் கம்பனியால் கொடுக்கப்படும் சம்பளத்தின் அரைவாசிதான் இப்போது கிடைக்கிறது. அதனால் எனது கல்விக்கான தொகையை அப்பாவால் கட்ட முடியவில்லை. எனது கல்வி நிறுத்தப்பட்டதால் நானும் தற்போது வேலைக்குச் செல்கிறேன். அப்படி வேலை செய்வதால் கிடைக்கும் காசை கட்டி படிப்பைத் தொடரலாம் என்று நினைக்கிறேன். வைத்தியராகவேண்டும் என்பது எனது கனவு . எனது அண்ணா சிறுநீரகப் பிரச்சினையால் சிறுவயதிலிருந்து கஷ்டப்படுவதைப் பார்த்துப் பார்த்தே , எனக்கு மருத்துவராக வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டேயிருந்தது. இப்போது அது சுக்குநூறாக உடைந்ததை போல உணர்கிறேன். அதிக நாட்கள் நான் அறையை விட்டு வெளியே வராமலேயே இருந்தேன். மனசு முற்றாக உடைந்து விட்டது. போராடிப் போராடிக் களைத்துவிட்டோம். இந்த நேரத்தில் தான் விடிவுக்கான நீண்ட நடை குறித்து அறிந்தேன். நடக்கிறேன். விடிவு கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருக்கிறேன் " என்று சொல்லி முடித்தார் ஹரினி.

இதன்பின்னர் ஹரினி தன் தந்தையுடன் தொடர்பு கொண்டு எங்களின் நிலைமை குறித்து பேசுங்கள் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார். அதன்படி எதிரொலி அவரது தந்தையையும் தொடர்பு கொண்டது.

"நான் திருகோணமலையில் திருக்கடலுர். நான் அங்கு பல அமைப்புகளில் செயற்பட்டுக்கொண்டிருந்தேன். எனது செயற்பாடுகள் இராணுவத்தினருக்கு எதிராக அமைந்ததால் நான் 2006 ஆம் ஆண்டு சடுதியாக நாட்டை விட்டு எனது மூன்று பிள்ளைகளோடு இந்தியா செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்திய அகதிமுகாம் என்பது ஒரு நிரந்தர வாழ்வுக்கான வழிமுறை இல்லை. அதிகாரிகள் எப்போது வேண்டுமென்றாலும் எதுவும் செய்யலாம் என்ற நிலைதான். நான் பொருளாதாரத் தேவைக்காக ஆஸ்திரேலியா வரவில்லை. அப்படி வரவேண்டும் என்றால் நான் ஏன் இந்தியா போக வேண்டும்? என்னுடைய பிள்ளையை தாய் இன்றி தனியாக தன்னுடைய வேலைகளையும் பார்த்து, படித்து , மருத்துவத்துறைக்குள் போக வேண்டிய நிலையில் பணம் இல்லாமல் இப்போது அதனைக் கைவிடவேண்டியநிலை. அதனால் வீட்டில் சரியாகத் தூங்கக்கூட முடியவில்லை .எனது பிள்ளையின் கல்வி எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டதே.

மூன்று வேலை செய்து 70 வீதமான படிப்புச்செலவை கட்டிவிட்டேன். ஆனால் எனது கம்பனியில் நடைபெற்ற விபத்தொன்றில் சிக்கி எனது கால் எலும்பு முறிந்து நடக்க முடியாத நிலைமை. பழைய படி நடக்க கூட முடியவில்லை. இந்த விபத்தால் ஏற்பட்ட வலியை விட என்னுடைய பிள்ளையின் படிப்பு நிறுத்தப்பட்டுவிட்டது என்ற கவலையில் இருந்து மீள முடியவில்லை . என் மகளின் படிப்பைத் தொடர வழியேற்படுத்துங்கள் " என்று கண்ணீர்க் கோரிக்கை வைக்கிறார் அந்தத் தமிழ்த் தந்தை. அவரின் கண்ணீருக்கு எப்போது விடிவு கிடைக்கும்?



# “எனது வாழ்வின் கசப்பின் சுவடற்ற பக்கங்களை மட்டுமே எழுத விரும்பினேன்”

## பி.எச்.அப்துல் ஹமீத்

**வானலை மட்டுமன்றி நமது தமிழ் இதயங்களையும் தொடர்ந்து ஆறு தசாப்தங்களாக வசீகரித்த நமது அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் ‘வானலைகளின் வழிப்போக்கன்’ என்ற தனது நூலை ஆஸ்திரேலியாவில் வெளியிட வந்திருந்தார். நாமனை வரும் அறிந்த ஹமீத் அவர்களின் கண்டறியாத எழுத்தா ளர் பக்கத்தை நமது வாசகர்களுக்கு அறியப்படுத்த வேண்டுமென்பதே இந்தச் செவ்வியின் நோக்கம்.**

**எதிரொலி : எழுத்தாளர் அ.முத்துலிங்கம் இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் “இது ஒரு சுயசரிதையோ கட்டுரைத்தொகுப்போ அல்லாமல் 60 ஆண்டு வானலை வரலாற்றில் ஒரு வழிப்போக்கனாக பார்த்த அனுபவங்களின் தொகுப்பு” என்று சொல்லியிருக்கிறார். இந்தப் புத்தகம் வரலாற்றில் மறக்கடிக்கப்பட்ட அறுபது ஆண்டு வானலையின் சரித்திரத்தை சொல்கிறது. உங்கள் அனுபவங்களை மிகுந்த தன்னடக்கத்துடன் மூன்றாவது நபரின் கோணத்தில் (நான் செய்தேன் என்று சொல்லாமல் இவன் செய்தான்) மிக நுண்ணியமான முறையில் ஆவணப்படுத்தியதற்கு நன்றி.**

அப்துல் ஹமீத்: நன்றி

**எதிரொலி : ‘வானலைகளின் வழிப்போக்கன்’ என்ற நூலில் 21 ஆவது அத்தியாயத்தில் வரும் வாக்கியம் “புத்தகங் களிலிருந்து கற்பதை விட மனிதர்களிடமிருந்து நாம் அதிகமாக அனுபவங்களை கற்கிறோம்” என்பது தான் . இந்த நூலின் முழுமையும் நிறைந்துள்ள செய்தி இது தானென்று சொல்லலாமா?**

அப்துல் ஹமீத்: என்னுடைய வாழ்க்கையில் பள்ளிப் படிப்பு அவ்வளவு மெச்சக்கூடியதல்ல. ஆனால் எனது ஆசிரியர்களிடமிருந்து தாயை நேசிப்பது போல தமிழை நேசிக்கக் கற்றுக்கொண்டேன். மொழியின் மேல் நான் கொண்ட பாசமும் ,ஆசிரியர்களிடம் கற்றுக்கொண்ட பல்வேறு அனுபவங்களுமே எனது முன்னேற்றத்திற்குக் காரணம் என்று சொல்வேன். எவற்றையெல்லாம் தவிர்க்கவேண்டும் ,எங்கேயெல்லாம் விலகி நிற்க வேண்டும் என்ற வாழ்விற்குத் தேவையான விடயங்களை எனது மூத்தவர்களிடமிருந்து மட்டுமே கற்றுக்கொண்டேன்.

**எதிரொலி : உங்களின் நூல் முழுதுமே கசப்பின் சுவடையே காண முடியவில்லை. பல்வேறு மனிதர்களைப் பற்றிய இனிய நிகழ்ச்சிகளை மட்டுமே பகிர்ந்திருக்கிறீர்கள். இது உங்களின் இயல்பு என்று சொல்லலாமா ? இல்லை யாரையும் காயப்படுத்தக் கூடாது என்ற நோக்கமா ?**

அப்துல் ஹமீத்: வானொலித்துறை புகழைத் தேடும் களம் .ஒருவனுக்கு புகழ்மாலை சேரும்போது போட்டியும் ,பொறாமையும் சேருமென்பது இயல்பு அல்லவா ? எனக்கு கிடைத்த புகழ் மாலைகளுக்கு நான் கொடுத்த விலை அதிகம். தாங்கிய வலிகளும் ஏராளம். ஆனால் அவற்றையெல்லாம் பதிவு செய்தால் வாசகனுக்கு வெறும் புலம்பலாகவே இருந்திருக்கும். இந்தப் புலம்பலால் வாசகனுக்கு என்ன பலன்? ஆதலால் இந்தப் புத்தகம் எழுதும்போதே எனது வாழ்வின் கசப்பான பக்கங்களை எழுதப்போவதில்லையென்று தீர்மானித்துவிட்டேன். கசப்பான நிகழ்வுகளையோ அல்லது எனக்குக் கெடுதி செய்யவேண்டுமென்று நினைத்தவர்களைப் பற்றியோ இந்த நூலில் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை என்று அவ்வாறான விஷயங்களைத் தவிர்த்துவிட்டேன்.

**எதிரொலி : நீங்கள் கூறியபடி போட்டியும், பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் மிகுந்த மனிதர்களுக்கிடையே பணியாற்றிய போதிலும் உங்களைத் தட்டிக்கொடுத்து உங்களை ஊக்குவித்த மனிதர்களும் இருந்தார்கள் ( குறிப்பாக பொன்மணி குலசிங்கம் ,விவியன் நமச்சிவாயம் என்று பல்வேறு அற்புதமான ஆளுமைகள்) அல்லவா?. அந்த ஆளுமைகளுடன் பணியாற்றியமை உங்களின் வெற்றிக்கு எவ்வாறு உறுதுணையாக இருந்தது ?**

அப்துல் ஹமீத்: நான் மிக இள வயதிலேயே வானொலித் துறைக்கு வந்துவிட்டேன் . எனது வழிகாட்டிகள் என்னைச் சிறுவனென்று ஒதுக்கிவிடாமல் எனக்குள் இருந்த திறமையை ஊக்குவித்தார்கள் .அது இறைவன் அளித்த அருட்கொடை என்று தான் சொல்வேன். எனக்குக் கிடைத்த மூத்தவர்கள் தனக்கு பின்னே வரும் தலைமுறையை வாழ்த்தி வரவேற்கும்படியாக எனக்கு அமைந்தது இறைவனின் அருள். நானும் எனது மூத்தவர்களின் வழியைப் பின்பற்றி எனக்குப் பின்னேவரும் தலைமுறையை வாழ்த்தி தொடர்ந்து ஊக்குவித்துவருகிறேன்.

**எதிரொலி : சிறுவயதில் உங்கள் நண்பருடன் ’சிறுவர் மலர்’ வாசகர் நிகழ்ச்சிக்கு ஐந்து நபர் மட்டுமே வானொலி நிலையத்திற்கு வரவேண்டுமென்றபோதிலும் நீங்கள் ஆறாவது நபராக அந்த நிகழ்ச்சிக்குச் சென்றது ,அங்கே எதிர்பாராத விதமாக உங்களுக்கு வானொலியில் பேச வாய்ப்புக் கிடைத்தது தான் உங்களின் வெற்றிப பாதைக்கு அடிக்கல் அல்லவா ? , நீங்கள் முன்பே கூறியபடி இந்தச் சம்பவம் இறைவனின் கருணையா இல்லை தற்செயல் என்று சொல்லலாமா?**

அப்துல் ஹமீத்: என்னுடைய வாழ்வில் எனக்குக் கிடைத்த வாய்ப்புகளெல்லாம் எனக்குத் தற்செயலாகக் கிடைத்தவையே. நானாக எந்த வாய்ப்பையும் தேடிச் சென்றதில்லை. அது இறைவனின் நியதி ,அவரது கட்டளை, அவர் அமைத்துத் தந்த பாதையென்று இன்று வரை நம்புகிறேன். இந்த நூலையும் கூட கொரோனா வைரஸ் காலத்தில் தான் எழுதினேன். இது கூடத் தற்செயலாக அமைந்தது தான். இறைவனின் கருணை என்று தான் சொல்வேன்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**எதிரொலி : நீங்கள் வெளியீட்டு விழாவில் பேசும்போது ’எழுதியதில் 3 இல் ஒரு பங்கு மட்டுமே இந்த புத்தக வடிவில் வந்திருக்கிறது. மீதியை நீளம் கருதி நீக்கிவிட்டேன் ’என்று சொன்னீர்கள். வருங்காலத்தில் அந்த நீக்கிய பக்கங்களை புத்தகமாக வெளியிடும் யோசனை இருக் கிறதா ?**

அப்துல் ஹமீத்: நூலில் நீக்கிய பக்கங்கள் பெரும்பாலும் என்னோடு சமகாலத்தில் பணிபுரிந்தவர்களுடனான அனுபவங்கள் பற்றியவை. அவ்வாறு பதியும்போது என்னை யறியாமல் யாரையாவது நான் தவறவிட்டிருந்தால் அவர்களின் மனவருத்தத்திற்கு ஆளாக நேரிடுமல்லவா? சமகாலத்தவர்கள் வானொலித்துறைக்கு ஆற்றிய கடமைகள் பற்றியதையெல்லாம் அடுத்து வரும் தலைமுறை வாசிப்பார்களோ என்ற தயக்கம் இருக்கிறது. பார்க்கலாம். இறைவன் வாய்ப்பளித்தால் எழுதலாம்.

**எதிரொலி : ராஜேஸ்வரி சண்முகம் அவர்களுக்கு கல்வித்தகுதி காரணமாக அறிவிப்பாளர் பணி கிடைக்கவில்லையென்றும் பிறகு கல்விச்சான்றிதழ் சமர்ப்பித்த பிறகு வேலையில் சேர்ந்தார் என்றும் உங்கள் புத்தகத்தில் கூறியிருக்கிறீர்கள்.உங்களது பார்வையில் திறமை முக்கியமா? இல்லை கல்வித்தகுதி முக்கியமா ?**

அப்துல் ஹமீத்: அடிப்படைக் கல்வித்தகுதி கண்டிப்பாக வேண்டுமென்பதே எனது கருத்து. வானொலி வேலையென்பது தொடர்ந்த தேடலைக் கொண்டதாகும். அதற்கு நூலகத்திற்கு சென்று தகவல்களைப் புரட்டிச் சரிபார்த்து, விரல்நுனியில் விஷயங்களைத் தெரிந்துவைத்திருக்கவேண்டும். ஆகையால் அடிப்படைக்கல்வி அவசியம் .

**எதிரொலி : வானலையில் பல புதிய முயற்சிகளுக்கு நீங்கள் விதையாக இருந்திருக்கிறீர்கள். ( ரயில் நிலையத்தில் சென்று நிகழ்ச்சி பதிவு, நவசரக்கோவை மற்றும் பல). நீங்கள் ஏற்கனவே கூறியபடி காழ்ப்பும் ,பழமைவாதமும் புழுங்கும் அந்தப் பணிச்சூழலில் உங்களால் எவ்வாறு இந்தப் புதிய முயற்சிகளை கொண்டு செல்லமுடிந்தது ?**

அப்துல் ஹமீத்: நான் மட்டுமல்ல, என்னுடன் பணிபுரிந்த அத்தனை நண்பர்களும்தான் அதற்குக் காரணம். பெற்ற தாய் பிள்ளையைப் பார்ப்பது போன்று எனக்குக் கிடைத்த மூத்தவர்கள் தான் எனது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தார்கள். குறிப்பாக பொன்மணி குலசிங்கம். பல்வேறு கவிதை, வரலாற்று நாடகங்களை எங்களால் கொண்டு வரமுடிந்தது. நாங்கள் நடத்திய ’இசையும்-கதையும்’ நிகழ்ச்சி பல்வேறு எழுத்தாளர்களை உருவாக்கியது. அது மட்டுமல்ல வானொலி நாடகங்களின் மேல் எனக்கிருந்த தணியாத ஈடுபாடும் ஒரு காரணமென்று சொல்ல முடியும்.

**எதிரொலி : புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் வரும் ஒவ்வொரு வானொலி சார்ந்த எல்லா நிகழ்விலும் உங்களின் தனித்துவம் தனித்துத் தெரிகிறது. இயல்பாகவே ஹமீத் தனித்துவம் வாய்ந்தவரா? இல்லை சூழல் காரணமா? இல்லை உங்களுடன் பணிபுரிந்த பல்வேறு மகத்தான ஆளுமைகளின் தாக்கத்தினால் அமைந்ததா ?**

அப்துல் ஹமீத்: அது இளமையிலிருந்தே எனக்கு இயல்பாகவே அமைந்தது என்று சொல்வேன். எனது ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒலிபரப்பான பின்னர் கூட இப்படியெல்லாம் செய்திருக்கலாமோ என்று ஒவ்வொரு முறையும் யோசித்து புதிது புதிதாகத் திட்டங்களை வகுத்துக்கொண்டு அடுத்த நிகழ்வில் அவற்றையெல்லாம் செய்து பார்ப்பது எனது இயல்பு. புதிது புதிதாகச் சிந்தித்துப் பார்க்கும் வழக்கம் உண்டு. அது எனது பலமா , இல்லை பலவீனமா என்று தெரியவில்லை .

**எதிரொலி : இந்தப் புத்தகத்தில் என்னை வியப்பிலாழ்த்திய விஷயம். மேஜர் சுந்தர்ராஜனின் எளிமை. அவ்வாறான எளிமையெல்லாம் இந்தக் காலத்தில் காண்பது மிக அரிது . உங்களின் எளிமை அவரின் பாதிப்பினால் விளைந்தது என்று சொல்லலாமா ?**

அப்துல் ஹமீத்: நான் முன்னமே கூறியபடி நான் மனிதர்களிட மிருந்தே கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு ஆளுமைகளிடருந்து நான் கற்றுக்கொண்ட விஷயங்கள் என்னைச் செம்மைப்படுத்த உதவின என்பதை நான் திடமாக நம்புகின்றேன்.



**எதிரொலி : ஒரு இலக்கிய வாசகனாக என் மனதைத் தொடும் இரண்டு இடங்கள் இந்தப் புத்தகத்திலுண்டு. ஒரு கிராமத்தில் ஒரு பெண்மணி கையில் ரேடியோ பெட்டியுடன் ஒற்றையடிப்பாதையில் நடந்து வருமிடம். மற்றொன்று தமிழகத்தில் ஒரு தேநீர்க்கடையில் முகமறியா மனிதர்கள் இலங்கை வானொலியில் வரும் உங்கள் குரலை உங்களுக்கே ஒருவர் சொல்லுமிடம் (உங்கள் முகம் அப்பொழுது யாருக்கும் தெரியாது).**

அப்துல் ஹமீத்: நான் அப்படியெல்லாம் நினைத்து எழுதவில்லை. நடந்ததை அப்படியே எழுதினேன். அந்த சம்பவங்கள் உங்கள் மனத்தைத் தொட்டன எனும்போது எனக்கும் மகிழ்ச்சியே.

**எதிரொலி : கோயபெல்ஸ் தத்துவம் பற்றி விலாவாரியாக எழுதியிருக்கிறீர்கள். இன்றுள்ள சூழ்நிலையில் அதனைப் பற்றிய விழிப்புணர்வு தேவைதான் இல்லையா?**

அப்துல் ஹமீத்: சிலர் ஊகத்தின் அடிப்படையிலும் மற்றும் சிலர் தம்மைப் பற்றி உயர்வாக எல்லோரும் பேசவேண்டுமென்றும் தவறான தகவல்களைப் பரப்பும்போது தவறான தகவல்கள் உண்மையென்று நம்பப்படும் சூழ்நிலை இருக்கிறது. நமது வானொலி வரலாறு முறையாக எழுதப்பட வில்லை. தவறான தகவல்கள் மூலம் வரலாறு திரித்து எழுதப்படக்கூடிய நிலையைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன் .

உதாரணத்திற்கு நமது வானொலியின் மூத்த அறிவிப்பாளர் S.P . மயில்வாகனன். ஆனால் இப்பொழுது பல பேர் அவரை மயில்வாகனன் சர்வானந்தன் என்று குறிப்பிடுகின்றனர். அது ஒரு பிழையான தகவல். மயில்வாகனன் சர்வானந்தன் எனக்கு பின்னால் வந்த ஒரு அறிவிப்பாளர். இந்தப் பிழைகளை எல்லாம் சுட்டிக் காட்டி சரியான வரலாறு வாசகனுக்குச் சேர வேண்டுமென்று தான் மயில்வாகனனைப் பற்றி தனியாக அத்தியாயம் எழுதி இந்தக் கோயபல்ஸ் தத்துவத்தின் தீமையை வேதனையோடு பகிர்ந்திருக்கிறேன்.

**எதிரொலி : ஆமாம் . தவறான தகவல்கள் இணையதளங்களில் வெளியாகும்போது, அந்தத் தகவல்களை முன்னுதாரணம் காட்டி விக்கிப்பீடியாவில் மேற்கோள் செய்து உண்மைப்படுத்தும் அவலம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது இல்லையா ?**

பி.ஹெச்: ஆம். அதனை சுட்டிக் காட்டவே அந்த அத்தியா யத்தை எழுதினேன்.

**எதிரொலி : உங்கள் புத்தகத்தில் அறிவிப்பாளர் மயில்வாகனன் பற்றி நிறைய தகவல்கள் இருக்கின்றன. மற்றொரு அறிவிப்பாள ரான கே.எஸ். ராஜா பற்றி எந்த தகவல்களும் இல்லையே (ஒரு புகைப்படம் தவிர) ?**

பி.ஹெச்: நான் முன்னமே கூறியபடி ,இந்த நூலில் என்னுடைய சமகாலத்தவர்கள் பற்றி எதுவும் எழுதவில்லை. எனது சமகாலத்தவர்களும் ஆழமான அற்புதமான பங்களிப்புகள் ஆற்றியிருக்கிறார்கள். யாரையாவது எழுதாமல் விட்டுவிட்டால் அது காழ்ப்புணர்ச்சி காரணமாக எழுதவில்லையென்று குறையாக போய்விடுமென்பதால் மொத்தமாக தவிர்த்துவிட்டேன். இந்த புத்தகம் வானலைகளின் வழிப்போக்கன் தனது பாதையில் சந்தித்த மூத்தவர்களைப் பற்றி எழுதவேண்டுமென்று ஆசைப்பட்டேன். எனது வழிகாட்டிகளாக இருந்த மூத்தவர்களைப் பற்றி எழுதவேண்டுமென்று தீர்மானித்து மற்றவைகளை எழுதவில்லை.

**எதிரொலி : உங்கள் புத்தகத்தில் இந்தக் கால தமிழைச் சிதைக்கும் தமிழக தொலைக்காட்சி ,வானொலி அறிவிப்பாளர்களை கண்டு நொந்து ‘கழுதைகளின் ரசனை’- என்று கடினமாக சாடியிருக்கிறீர்களே ?**

பி.ஹெச்: மாற்றம் ஒன்றே மாறாதது அல்லவா. இந்த வழக்கம் ஒரு குறுகிய காலமே நீடிக்க முடியுமென்று நம்புகிறேன். அடுத்து வரும் தலைமுறைக்கு தப்பான வழிகாட்டியாக இருந்துவிடக்கூடாது என்பதே எனது ஆதங்கம்.தமிழ்நாட்டில் தனியார் ஊடகங்கள் பெருகிவிட்டன. அவர்கள் தங்கள் இருப்பை தாங்கி நிற்பதற்கு விளம்பரங்களால் வரும் வருமானம் தேவை.அதற்காக அவர்கள் செயற்கையான முயற்சிகளை எடுக்கும்போது, நமது பண்பாடு,கலாசாரம் ,இனம் சார்ந்த விழுமியங்களை சிதைக்கும்படி செய்கின்றனர். இந்தப் போக்கு மொத்தமாக எல்லா இடமும் பரவும்போது , நேயர்களுக்கு நல்ல விஷயங்கள் கிடைக்காமல் போய்விடுவதை தான் சொல்லியிருக்கிறேன் . விழுமியங்களுக்கு மதிப்பில்லாமல் வெறும் லாப நோக்கை மட்டும் கருதி செயல்படுகின்றன. அதற்கு காரணம் அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் இல்லை என்பது தான்.

**எதிரொலி: உங்களது ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பின்னே தளராத முன்னேற்பாடுகள், கடுமையான உழைப்பு இருந்திருக்கிறதல்லவா? ஆனால் இப்போதுள்ள அறிவிப்பாளர்களுக்கு அந்த அளவு முன்னேற்பாடு தேவையில்லை. இருந்த இடத்திலிருந்து அனைத்தும் அலைபேசி வழியாகப் பெறமுடியுமென்பதால் தரமும் அந்த அளவில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா? ஒரு மழை நாளில் அதிகாலை பிரயாணம் செய்யும் பொழுது, பேருந்து பழுதாகி நிற்கும்போது சாக்கடையும், மழைநீரும் கலந்த வெள்ளப்பெருக்கில் நடந்து வானொலி நிலையத்திற்கு 5 நிமிடத்திற்கு முன்னே சென்று அறிவிப்பை முடித்த பிறகு குளித்து உடை மாற்றச்செல்லும் சம்பவம் உங்கள் அர்ப்பணிப்பு உணர்விற்கு சிறந்த உதாரணம். அந்த மாதிரியான அர்ப்பணிப்பு உணர்வு இப்பொழுது இல்லாதது கூட ஒரு காரணமாயிருக்கலாம் அல்லவா ?**

அப்துல் ஹமீத்: இப்போது வசதிகள் பெருகிவிட்டன. மெல்லிசை மன்னர் எம்.எஸ் .விஸ்வநாதன் சொல்லியிருக்கிறார் “ வசதி வந்தால் அசதி வந்துவிடும் “. வசதிகள் பெருகிவிட்டதால் பெரும் முன்னேற்பாடுகள் தேவையில்லை. எந்தப் பிழையையும் எப்பொழுது வேண்டுமானாலும் வெட்டி சரி செய்துவிடலாம் எனும் வசதிகள் இப்போது இருப்பதும் ஒரு காரணம்.

**எதிரொலி : தமிழ் பொப்பிசைக்கு மட்டும் தனி அத்தியாயம் உங்கள் புத்தகத்திலுள்ளது. சின்ன மாமியே பாடலை பாடியவர் நித்தி கனகரத்தினம் , சிலோன் மனோகரின் பைலா பாடல்கள் என்று பல தகவல்களை சொல்லியிருக்கிறீர்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த பொப்பிசை இயக்கம் ஏன் மேலும் வளரவில்லை?**

அப்துல் ஹமீத்: இலங்கையில் தொடக்கத்தில் பைலா பாடல்கள் என்று ஆரம்பித்த அந்தப் பாடல்கள் பின்னர் தமிழ் பொப்பிசையாக வளர்ந்தன. ஒரு வித்தியாசமான தாளக்கட்டில் நித்தி கனகரத்தினம் அந்தப் பாடல் வழிமுறையைப் பயன்படுத்தினார். தொடர்ந்து வளர்ந்த அந்த இயக்கம் 1983ல் நடந்த இனக் கலவரத்தினால் தடைப்பட்டது. தமிழ் பொப்பிசைக் கலைஞர்கள் உலகெங்கும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டதால் அந்த இயக்கம் அதன் பிறகு வளர்ச்சியடையவில்லை.

**எதிரொலி : இந்தப் புத்தகத்தில் என்னை ஆச்சரியப்படுத்தும் ஒரு சம்பவம் உண்டு. இலங்கை ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசா உங்களைக் கூப்பிட்டு அவரது கட்சியின் கீதத்தை தமிழில் மொழிபெயர்த்து தரவேண்டுமென்றும், அந்தக் கீதத்தை இரு மொழி மக்களும் வேற்றுமை மறந்து பாடவேண்டும் என்றும் உங்களிடம் கூறியிருக்கிறார். அத்தோடு மட்டுமல்லாமல் “இந்தக் கட்சிக் கீதத்தைப்போல் நாட்டின் தேசியகீதத்திலும் இரு மொழிகளும் ஒன்றாக இடம்பெற்றிருந்தால் இந்த நாட்டில் இனப்பிரச்சினை தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காதல்லவா?” என்று ஆதங்கப்பட்டதாகவும் எழுதியிருக்கிறீர்கள்.**

அப்துல் ஹமீத்: ஆமாம் , ஒரு தொலைநோக்குப் பார்வையில் அவர் சொல்லியது. சிங்கள கீதம் வரும்போது தமிழர்கள் வாய்மூடி அமைதியாக இருக்கக் கூடாது .அதே போன்று தமிழ்க் கீதம் வரும்போது சிங்களவர்கள் பாடாமல் அமைதியாக இருக்க கூடாது என்றும் ஆசைப்பட்டார் . எல்லாச் சொற்களையும் எல்லாரும் உச்சரித்து ஒற்றுமையாகப் பாடவேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடு தான் அது .

**எதிரொலி : வரலாற்றை நாம் பின்னோக்கிச் சென்று மாற்ற முடியாது. ஒருவேளை அவர் உயிருடன் இருந்திருந்தால் வரலாறு வேறுமாதிரி ஆகியிருக்கலாம் அல்லவா ?**

அப்துல் ஹமீத்: ஆமாம். வேறு மாதிரி இருந்திருக்கலாம். அவரைப் போலவே அவருக்கு பின்னர் வந்த திருமதி.சந்திரிகா இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு பிரபாகரனை முதல்வர் ஆக்குவோம் என்று கருத்து சொல்லியிருந்தார். மாற்றங்கள் வரக்கூடிய சந்தர்ப்பங்களை நாம் தவறவிட்டோமா ? இல்லை நம் கையிலிருந்து தவறிப் போய்விட்டதா தெரியவில்லை. சில பயணங்கள் திசை மாறியிருந்திருக்கலாம் . இது எல்லா நாட்டுக்கும் பொருந்தும். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்தியா - கனடா இடையே இரு பிரதமர்களுக்கிடையேயான கருத்து முரண்பாடு , இரு நாட்டிற்கிடையேயான பிரச்சினையாக மாறியிருக்கிறது . அதே போல் இங்கு வாழும் இரு மொழி பேசும் மக்களுக்கிடையேயான இந்த முறுகல் நிலைக்கு யார் யாரோ காரணமாக இருந்திருக்கலாம். பொதுமக்கள் எதிரிகளாக பாவித்து மோதிக்கொண்டார்கள் என்றில்லை. நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்த அரசியல்வாதிகளின் சிந்தனைகள் முரண்படும்போது இப்படியான பாதிப்புகள் ஏற்படுவது இயல்பு.

மெல்பேர்னில் நூல் வெளியீட்டின் போது...



**எதிரொலி : உங்களது வெற்றிக்கு காரணமாக இருந்தது உங்களின் தொடர்ந்த தேடல், கடின உழைப்பு , அர்ப்பணிப்பு மட்டுமே . உங்கள் வாழ்நாளில் பல பிரபலங்களை பேட்டி எடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு பிரபலத்தையும் பேச தூ ண்டும்படி உங்கள் கேள்விகள் அமையும். ஒரு எழுத்தாளராக உங்களை பேட்டி கண்டு எழுதவேண்டுமென்பது எங்களது ஆசை. பொறுமையாக எங்களது கேள்விகளுக்கு பதில் கூறியதற்கு நன்றி.**

பி.ஹெச்: எனக்கு இந்த பேட்டி வித்தியாசமான அனுபவம். நான் எழுதியதை முழுவதும் படித்து ,மிக நன்றாக உள்வாங்கி உங்கள் கேள்விகளைக் கேட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சி. உங்களுக்கு எனது வாழ்த்துகளும், பாராட்டுகளும். நன்றி. வாழ்க வளமுடன்

# Resigned with consent or Forced ?

In a recent television interview, Tamilarasu Party's Member of Parliament and President's Counsel, MA Sumanthran stated the following. "There are three classes of judges in Sri Lanka. The first party is those who dare to do what I do even if pressure comes and continues in the office. The second are the ones who are unwilling to do wrong and give in to pressure, but also unwilling to face pressure. So those are who resigning from the post. Third parties are the worst. A party that gives in to pressure and does what they say. Sometimes this party doesn't need pressure. There are judges who will take everything granted forever ".

Among the three categories classified by Member of Parliament MA Sumandran, Mullaitivu District Court Judge R. Saravanaraja falls into the second category. In other words, he resigned from the position he held dearly regarding the following issues. He had given the following comments to the media about his resignation.

"Constant pressure was applied by the government to reverse the orders passed by the judge in the Kurundurmalai case. Member of Parliament Sarath Weerasekhara and members of Parliament belonging to the majority religion threatened me in Parliament and outside. Recently police protection for me (for the judge) was reduced while investigators continued to monitor me. The Attorney General (Sanjay Rasarathanam) called me (Judge Mullaitivu) to meet him in his office on (21.09.2023) and pressured me to change the court orders in the Kurundurmalai case. Two cases have been filed against me (Judge of Mullaitivu) in the Court of Appeal in connection with the Kurundurmalai case . I have resigned from all my much loved judicial posts due to life threats and pressure on me based on these. "

Therefore, Mullaitivu District Court Judge R.Saravanaraja resigned from his position due to the pressure of the Attorney General and the threats of the investigators. Thus, the main reason for increasing the pressures of the government on him is the fact that he is dependent on the judiciary and acts independently - according to the law. Accordingly, the final judgment passed by him must have been the proximate cause of the great pressure he was subjected to.

His judgment before abdication

" Rasaiya Partheepan or Dileepan is not alive now. It is known that he went on a non-violent fast to death with certain demands, including the withdrawal of the Indian Army. The police failed to explain to the court how a vehicle with his photo and flags in the procession was a disturbing public harmony. It is everyone's personal right to remember the deceased Rajaiah Partheepan or Dileephan. To prevent it is against one's personal freedom. In fact, Rajaiah Partheepan or Dileepan lives on as a sacrificial lamp in the hearts of the Tamil people. The petition feels that banning his commemoration will create unrest among the public. "



Unprecedentedly, the government tried hard to stop this year's Tyaga-deepam commemorations. In Trincomalee, it took steps to stop the violence even after it was unleashed. Since that was not possible, the Attorney General's Department took a hard line to block commemorations through the courts as much as possible. For example, on the first day, the Jaffna court dismissed the case for the injunction by the police, and on the second day, the officers of the Attorney General's Department visited Jaffna in a special train and fought to stop the memorial service of Dilepan. That didn't work either. Court judgments in Vavunia, Kilinochchi, Mannar, Mullaitivu have not been Favourable to the government. Observing one court, the other courts have acted correctly on the Tamils' right to remembrance. That is why a judge who gave more justice to Tamils through the courts was targeted and threatened. He was expelled from the country with that threat.

There is another reason for the judge's resignation and expulsion from the country. It is the case of the Kokkudhuduwai human burial ground. Human remains found accidentally during the construction of an irrigation canal were the key to the systematic excavation of the site. It was the Mullaitivu District Court that took the advice of the departmental experts , set up a committee, estimated the cost, got it from the government and started the excavation work. All Tamilians know what would have happened to such excavation work if an independent body or any other structure of the government had taken charge of such an excavation work in Mullaitivu district, where there is a lot of surveillance and threat of investigators. Therefore, Mullaitivu District Court and its judge R.Saravanaraja fulfilled their responsibility in this matter. The judge did not



stop with his duties as soon as the excavation work was done and the report was sufficient, he went directly to the excavation area and was involved in monitoring. Hence, within a short period of time, as many as 17 human remains were exhumed. There is overwhelming evidence that these human remains are those of LTTE fighters who surrendered to the army during the final war. Therefore, it is certain that the Sri Lankan Army was involved in massive crimes against humanity during the last war - while the arguments are being raised in front of the Kokkuthodduwai human burial ground, the excavation team has announced that it will temporarily stop its work and submit its preliminary report to the Mullaitivu District Court Judge. The issue of Kokkuthodduwai human burial ground has already gone to the judge who has already shown action to the government in the judgments related to the Kurundurmalai illegal Buddhist Viharai structure and the judgments related to commemorative events. From his rulings on the first two issues, it can be inferred what pronouncement he would make on the third issue of Kokkuthuduai human burial. So the judge was forced out of office before the report of the excavation came out.

● கோபி

அண்மையில் இடம்பெற்ற தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பின்வருமாறு குறிப்பிட்டார். “இலங்கையில் மூன்று தரப்பிலான நீதிபதிகள் இருக்கிறார்கள். முதல்தரப்பினர் அழுத்தம் வந்தால் வரட்டும் நான் செய்வதைச்செய்வேன் எனத் துணிந்து செயற்பட்டு தொடர்ந்து பதவியில் இருக்கின்றவர்கள். இரண்டாவது தரப்பினர் யாரென்றால், பிழையானதைச் செய்ய விருப்பமில்லை - அழுத்தத்திற்கு இடங்கொடுக்க விருப்பமில்லை, ஆனால் அழுத்தத்திற்கு முகங்கொடுக்கவும் திராணியில்லை. ஆகவே பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போகிறவர்கள். மூன்றாவது தரப்பினர் மிகமோசமானவர்கள். அழுத்தத்திற்கு இடங்கொடுத்து அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைச் செய்கின்ற தரப்பினர். சிலவேளைகளில் இத்தரப்பிற்கு அழுத்தமே தேவையில்லை. எள்ளென்று கேட்டாலே எண்ணெயைக் கொண்டு சென்று கொடுக்கும் நீதிபதிகள் இருக்கிறார்கள்”.

இங்கே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வகைப்படுத்தும் மூவகையறாக்களிலும், இரண்டாவது வகையறாவுக்குள் வருகிறார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற




# முல்லைத்தீவு நீதிபதி பதவியைத் துறந்தாரா?

# பதவியைத் துறக்கச்செய்யப்பட்டாரா?

நீதவான் ரி.சரவணராஜா. அதாவது பின்வரும் விடயங்களைக் குறித்துத் தான் நேசித்த பதவியைத் துறந்தார் அவர். தன் பதவி துறப்பு குறித்துப் பின்வருமாறு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார். ”குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர். அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்ட அதேவேளை புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னை கண்காணித்துவந்தனர். சட்டமா அதிபர் (சஞ்சய் இராசரத்தினம்), என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் (21.09.2023) ஆம் திகதி அன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார். குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு (முல்லைத்தீவு நீதிபதிக்கு) எதிராக மேன்முறையீடு நீதிமன்றில் (Court of Appeal) எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குள் கோப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.”

எனவே சட்டமா அதிபரினது அழுத்தத்தினாலும், புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலினாலும் தொடர்ந்தும் இங்கு வாழமுடியாத நிலையில் தன் பதவியைத் துறந்து புலம்பெயர்ந்தவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரீ.சரவணராஜா. இவ்வாறு அரச தரப்பின் அழுத்தங்கள் அவர் மீது அதிகரிக்க நீதித்துறை சார்ந்து அவர் சுயாதீனமாக - சட்டத்தின்படி செயற்பட்டமையே பிரதான காரணமாக இருக்கின்றது. அதன்படி அவருக்கு ஏற்பட்ட அதிக அழுத்தத்திற்கு உடனடிக் காரணமாக அவரால் வழங்கப்பட்ட இறுதித்தீர்ப்பே அமைந்திருக்க வேண்டும்.

## பதவி துறப்பிற்கு முன்பாக அவர் வழங்கிய தீர்ப்பு

“இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார் என்பது அறியக்கூடியதாக உள்ளது. அவரது புகைப்படம் மற்றும் வர்ணக்கொடிகளைக் கொண்ட வாகனம் பேரணியாகச் செல்வதால் பொதுமக்களின் நல்லிணக்கத்திற்கு எவ்வாறு இடையூறு ஏற்படுகின்றது என்பதனை பொலிஸார் மன்றில் விளக்கமளிக்கத் தவறியுள்ளனர். மரணமடைந்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவரை நினைவுகூருவதென்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமையாகும். அதனைத் தடுப்பது ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு எதிரானதாகும். உண்மையில் இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஒரு தியாக தீபமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவரை நினைவுகூருவதை தடை செய்வதாலேயே பொதுமக்களின் மத்தியில் அமைதியின்மை ஏற்படும் என மன்று கருதுகின்றது.”

என்றுமில்லாத வகையில் இந்த வருட தியாகதீபம் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்த அரசதரப்புக் கடுமையாக முயற்சித்தது. திருகோணமலையில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுக்கூட தடுக்க நடவடிக்கை எடுத்தது. அதுவும் சாத்தியப்படாத காரணத்தினால், இயலுமானவரைக்கும் நீதிமன்றங்களின் ஊடாக நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை போடுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் கடும்பிரயத்தனம் எடுத்தது. அதற்கு உதாரணமாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முதல்நாள் பொலிஸார் மேற்கொண்ட தடையுத்தரவிற்கான வழக்கினை நீதிமன்றம் நிராகரிக்க, இரண்டாம் நாள் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிறப்பு உலங்குவானூர்தியில் யாழ்ப்பாணம் வருகைதந்து, திலீபனின் நினைவேந்தல் நிகழ்வினைத் தடுக்கப் போராடினர். அதுவும் பலனளிக்கவில்லை. வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு என எங்கேயும் நீதிமன்ற தீர்ப்புகள் அரசுக்கு சாதகமாக அமையவில்லை. ஒரு நீதிமன்றத்தை அவதானித்து மற்றைய நீதிமன்றங்கள் தமிழர்களுக்கு இருக்கும் நினைவேந்தல் உரிமை விடயத்தில் சரியாகச் செயற்பட்டன. எனவேதான் நீதிமன்றங்கள் ஊடாகத் தமிழர்களுக்கு அதிக நியாயத்தை வழங்கிய நீதிபதியொருவர் இலக்குவைக்கப்பட்டார். அச்சுறுத்தப்பட்டார். அந்த அச்சுறுத்தலோடு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

நீதிபதியின் பதவித்துறப்பிற்கும், நாட்டை விட்டு வெளியேற்றத்திற்கும் இதனைவிட இன்னொரு காரணமும் உண்டு. கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம்தான் அது. நீர்ப்பாசனக் கால்வாய் அமைப்பிற்கான பணிகளின்போது, எதேச்சையாக அகப்பட்ட மனித எச்சங்கள், அப்பகுதியில் முறைப்படியான அகழ்வாய்வை மேற்கொள்வதற்கான திறவுகோலாக அமைந்தன. அதற்காக துறைசார் வல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று, ஒரு குழுவை அமைத்து, செலவினத்தைக் கணிப்பிட்டு, அதனையும் அரசிடமிருந்தே பெற்று அகழ்வு வேலைகள் தொடங்குவதற்கு முழுமூச்சாகச் செயற்பட்டது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றமே ஆகும். புலனாய்வாளர்களின் அதிகளவு கண்காணிப்பும், அச்சுறுத்தலும் இருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில், இத்தகையதொரு அகழ்வுப் பணியை சுயாதீனமானதொரு அமைப்போ அல்லது அரசின் வேறு ஏதாவது கட்டமைப்போ பொறுப்பேற்றிருப்பின் இவ்வகழ்வு வேலைகளுக்கு என்ன நடந்திருக்கும் என்பதைத் தமிழர்கள் அனைவருமே அறிவர். எனவே இதுவிடயத்தில் தமக்கிருக்கும் பொறுப்பை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றமும், அதன் நீதிபதி ரீ.சரவணராஜாவும் சரிவரச் செய்தனர். அகழ்வுப் பணிகள் இடம்பெற்று, அறிக்கை வந்தால் போதுமானது என நீதிபதி தன் கடமைகளோடு நின்றுவிடாது, நேரடியாக அகழ்வாய்வுப் பகுதிக்கு சென்று கண்காணிப்பிலும் ஈடுபட்டிருந்தார். ஆகவேதான் குறுகியதொரு காலப்பகுதிக்குள், 17 வரையான மனித எச்சங்கள் அகழப்பட்டன. இந்த மனித எச்சங்கள் இறுதிப்போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிப் போராளிகளினது என்பதற்கான அதிகளவு சான்றுகள் காணப்படுகின்றன. எனவே இலங்கை இராணுவம் இறுதிப்போரின்போது மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களில் ஈடுபட்டுள்ளமை உறுதியாகின்றது - என்கிற வாதங்கள் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியை முன்வைத்து எழுந்துவரும் நிலையில், அகழ்வுக் குழு தற்காலிகமாகத் தனது பணிகளை நிறுத்தி, அதன் முதற்கட்ட அறிக்கையை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவானிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அறிவித்தது. ஏற்கனவே குருந்தூர்மலை சட்டவிரோத பௌத்த விகாரை அமைப்பு தொடர்பான தீர்ப்புகள், நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பான தீர்ப்புகள் போன்றவற்றில் அரசுக்கு அதிரடி காட்டும் நீதிபதியிடம் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரமும் சென்றுவிட்டது. முதல் இரண்டு விடயங்களுக்கும் அவர் வழங்கிய தீர்ப்புக்களில் இருந்து, மூன்றாவதான கொக்குத்தொடுவாய் மனிதப்புதைக்குழி விவகாரத்தில் எத்தகைய அறிவிப்பினை வெளியிடுவார் என்பதனை ஊகிக்க முடியும். எனவே இந்த அகழ்வுப் பணியின் அறிக்கை வெளிவரமுன்பே நீதிபதி மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுப் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதே உண்மை. ■


Tarra Bulga National Park
Gippsland
Cape Woolamai
Phillip Island
அருகில் இருங்கள்,
அருகே செல்லுங்கள்,
விக்டோரியாவைப் பார்வையிடவும்
நீங்கள் ஒரு உலகமளவு தொலைவில் இருப்பதைப் போல உணர நீங்கள் இப்போது வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. கூட்டத்தை விட்டு வெளியேறி உங்கள் இடத்தைக் கண்டுபிடித்தாலே போதுமானது. நீங்கள் இயற்கையுடன் மீண்டும் கலந்து, இயற்கைக்காட்சிகளில் திளைத்து மன நிம்மதியையும் அமைதியையும் பெற்றுக்கொள்வதற்கு சரியான இடம் இதுவேயாகும். நீங்கள் இங்கே ஒரு சிறந்த மதுவை அனுபவித்து மன மகிழ்வுடன் இருக்கலாம். அதற்காக மேலும் மேலும் விக்டோரியாவிற்கு அருகில் செல்லுங்கள்.
VISIT VICTORIA
visitvictoria.com

# ஒடுக்குமுறைக்கான கருவியாக மாறும் இனமுறுகல்

● ஜெரா

தியாகதீபம் திலீபன் அகிம்சைப்போராட்டத்தின் அடையாளமாக ஈழத்தமிழர்களால் பார்க்கப்படுகின்றார். அவர் மேற்கொண்ட உன்னதமிகு போராட்டத்தின் மீது ஈழத்தமிழர்களுக்கு எப்போதுமே தனி மரியாதையுண்டு. அதற்காகவே ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதத்தில் வரும் அவரது நினைவேந்தலை எத்தடை வரினும் சிரமேற்கொண்டு நடத்திமுடித்து விடுகின்றனர். இந்தப் பின்னணியில்தான் இவ்வருடமும் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் வெகுமக்களின் ஆத்மார்த்தமான பங்கெடுப்புடன் இடம்பெற்று முடிந்திருக்கிறது. இந்நிகழ்வு நாட்களில் இடம்பெற்ற சில சம்பவங்கள் இலங்கைத் திருநாடும், இந்நாட்டு சிங்கள மக்களும் அகிம்சைப் போராட்டத்திற்குக் கூட இணக்கமற்றவர்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தது.

அதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்தைத் தாங்கிய நினைவூர்தியானது கடந்த மாதம் 15 ஆம் திகதி பொத்துவிலில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்திருந்தது. வடக்கு, கிழக்கின் தமிழர் வாழிடங்களின் ஊடாக பயணித்து, அவருக்கு அஞ்சலி செய்வதே இவ்வூர்திப் பயணத்தின் நோக்கமாகும். அதன்படி கடந்த 17 ஆம் திகதி மூதூர் - கட்டைப்பறிச்சான் பகுதியிலிருந்து பயணத்தை ஆரம்பித்து, ஆலங்கேணி, தம்பலகாமம் ஊடாகத் திருகோணமலை நோக்கி ஊர்தி பயணித்துக்கொண்டிருந்தது. இதன்போது சர்தாபுர என்கிற சிங்களக் குடியேற்றக் கிராமத்தையும் ஊர்தி கடக்க வேண்டியிருந்தது. ஊர்தி குறித்த சிங்களக் குடியேற்றக் கிராமத்தை நெருங்குகையில், இந்தக் கிராம சிங்களமக்கள், திருகோணமலை மாவட்ட தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்கத்தலைவர் தலைமையில் வீதியில் திரண்டனர். தியாகதீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் ஊர்தியைப் பொல்லுகளாலும், கற்களாலும் தாக்கினர். ஊர்தியோடு பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட 14 உணர்வாளர்கள் தாக்குதல்களுக்குள்ளாகினர். தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படமும், நினைவூர்தியும் பலத்த சேதத்துக்குள்ளாகியன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகத்தின் பேரில் சர்தாபுர பகுதியைச் சேர்ந்த 06 சிங்களவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்தக் கைது தொடர்பான வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது. அன்றையதினம் அதிக நேரம் எடுத்துக்கொண்ட இவ்வழக்கில், சந்தேகநபர்களை ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். ஆயினும் அன்றையதினம் மாலையே உயர் அழுத்தங்கள் காரணமாக கைதுசெய்யப்பட்ட ஆறுபேரும் விடுவிக்கப்பட்டனர். இவ்விடுவிப்புக்குச் சொல்லப்பட்ட மிக முக்கியமான காரணம், இந்த ஆறு பேரையும் தொடர்ந்தும் சிறையில் வைத்திருந்தால், அமைதிப்பூங்காவான திருகோணமலையில் இனங்களுக்கிடையில் வன்முறை ஏற்படும், சமாதானச் சீர்குலைவு ஏற்படும் என்பதே ஆகும்.

இதற்கு முன்பும் திருகோணமலையை மையப்படுத்தி நடத்தப்பட்ட பல போராட்டங்கள் "இனங்களுக்கிடையில் வன்முறை ஏற்படும், சமாதானச் சீர்குலைவு ஏற்படும்" என்கிற



வாய்ப்பாடுகளின் அடிப்படையில் தடுக்கப்பட்டிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டில் அபகரிக்கப்பட்ட கன்னியாய் வெந்நீரூற்றினை மீட்பதற்கான அறவழியிலான போராட்டம் சிங்களக் காடையர்களின் பிரசன்னத்தினால் தடுக்கப்பட்டது. அதேபோல திருகோணமலை நகரின் மத்தியில் திருக்கூடலூர் பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கும் சிங்களவர்களினால் அங்கு வாழும் தமிழர்களால் தம் ஆலய வழிபாட்டைக் கூட செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அப்பகுதியில் உள்ள சைவஆலயமொன்றின் தேர்த்திருவிழாவின்போது, சுவாமியைக் கடலுக்குள் இறக்கிவிட்டனர் என்பதைக் காரணம் காட்டி, அங்கு வன்முறை வெடித்தது. சிங்களக் குடியேற்றப்பகுதியிலிருந்து வந்தவர்கள், தமிழர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். ஆனால் உண்மையில் இந்தத் தாக்குதலுக்கான காரணம் இந்தக் கோயில் திருவிழா பிரச்சினை என்று சொல்லப்படினும், அதற்குப் பிறிதொரு காரணமும் இருந்தது. அங்கு வாழும் தமிழ் மீனவர்கள், சிங்கள மீன்கொள்வனவாளர்களுக்குத் தம் பிடிக்கும் மீனை வழங்காமல், அப்பகுதியில் மீன்கொள்வனவிற்காக முதலீடு செய்திருக்கும் புலம்பெயர் தமிழர் ஒருவருக்கு வழங்கிவிட்டனர் என்கிற மனப்புழுக்கத்தின் காரணமாகவே திருக்கூடலூரில் தமிழர்கள் தாக்கப்பட்டனர். ஆலய வழிபாட்டைக் காரணம் காட்டி இந்தப் பிரச்சினையைக் கையாண்ட சிங்களவர்கள் குறித்த புலம்பெயர் தமிழரை ICCPR சட்டத்தின் கீழ் கைதுசெய்யவேண்டும், அவரால் "இனங்களுக்கிடையில் வன்முறை ஏற்படும், சமாதானச் சீர்குலைவு ஏற்படும்" என்கிற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அத்தோடு திருக்கூடலூர் பகுதியில் சிங்களவர்களால் தாக்கப்பட்டசம்பவத்துக்கு எவ்வித நீதியும் கிடைக்கவுமில்லை.

இவ்வருடத் தொடக்கப்பகுதியில் திருகோணமலையின் நெல்சன் தியேட்டருக்கு அருகாமையில் தாய்லாந்து பௌத்த துறவிகளின் வருகையை நினைவுபடுத்தும் விதமாக புத்தர் சிலையொன்றை நிறுவும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு எதிராகத் தமிழ் உணர்வாளர்கள் ஜனநாயக முறைப்படி தம் எதிர்ப்பைக் காட்ட முனைந்தபோதும், 'இனங்களுக்கிடையில் வன்முறை ஏற்படும், சமாதானச் சீர்குலைவு ஏற்படும்' என்ற காரணங்களைக் காட்டி அந்தப்போராட்டங்கள் தடுக்கப்பட்டன. அதனை மீறிப் போராடியவர்கள் மீது தாக்குதல் நடத்த சிங்கள இனவாதக் கலவரக்காடையர்கள் களமிறக்கப்பட்டனர்.

திருகோணமலையின் குச்சவெளிப் பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள பெரியகுளம் நாகதம்பிரான் ஆலயத்தை அழித்து பெரலுகந்த ரஜமகாவிகாரை எனும் பெயரில் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் மிக நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த பிரதேசமக்கள் முயற்சித்தும் எதுவும் நடக்கவில்லை. எனவே கடந்த மாதத்தில் மட்டும் இரண்டு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இரண்டுமே "இனங்களுக்கிடையில் வன்முறை ஏற்படும், சமாதானச் சீர்குலைவு ஏற்படும்" என்ற வாய்ப்பாடுகளைக் காரணம் காட்டி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இப்படியாகத் தமிழர்களின் தலைநகரான திருகோணமலையில் தமிழர்கள் அறவழிப்படி - ஜனநாயக முறைப்படி ஓரிடத்தில் கூடித் தமக்கு எதிரான அநீதிகளுக்கு நீதிகோரக் கூட உரித்தற்றவர்களாகப் பெரும்பான்மையினரால் மாற்றப்பட்டுள்ளனர். சிங்களவர்களையே காணமுடியாத ஊராக இருந்த திருகோணமலையானது இவ்வாறானதொரு நிலையை எப்படி அடைந்தது எனில், புட்டும் தேங்காய்பூவையும் போன்று உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால்தான். தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட ரீதியில் உருவாக்கப்படும் சிங்களக் குடியேற்றங்களின் நோக்கமும் இதுவேதான். இந்தக் குடியேற்றங்கள் தமிழர்களது மரபுவழித் தாயகப் பிரதேசத்தை அபகரித்துக்கொள்ளும் அதே வேளை, அத்தகைய அபகரிப்புக்கு எதிரான ஜனநாயக வழிப் போராட்டங்களைக் கூடத் தடுத்துவிடுகின்றன. சிங்களவர்கள் தாக்குவார்கள், வீடுகளை எரிப்பார்கள், கொல்வார்கள், கடத்துவார்கள், ரயர் போட்டுக் கொளுத்துவார்கள் என்கிற பயம் தமிழர்களை எல்லாவித அநீதிகளையும் பொறுத்துக்கொண்டு பேசாமடந்தைகளாக அடிமைவாழ்வு வாழும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டுள்ளது. திருகோணமலையில் இவ்வளவு அநீதிகள் நடந்தும் தமிழர்கள் அமைதியாக வாழ்கிறார்கள் எனில் அந்த அமைதிக்குப் பெயர் நல்லிணக்கமல்ல. சிங்களவர்களோடு இணைந்து வாழ்கிறார்கள் என்ற அர்த்தமுமல்ல. பயம்தான் முழுக்காரணமும். அந்தப் பயம் தமிழர்களை அடங்கிப்போகச் செய்கிறது அல்லது புலம்பெயர்ந்து செல்ல வழியேற்படுத்துகின்றது.

LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR

FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com

VCE Legal Studies



எஸ்.எஸ். ஜோதிட நிலையம்

பண்டித்: தேஜா ஜி

PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற இந்தியாவின் பரம்பரை கைரேகை ஜோதிடரைச் சந்தியுங்கள்.







100% சரியான கணிப்பு

- திருமண பாக்கியம்
- நீதிமன்ற வழக்குகள்
- குழந்தைகள் பிரச்சினை
- அதிர்ஷ்ட எண்கள்
- கல்வி விஷயங்கள்
- லக்ஷ்மி பூஜா
- வேலைப் பிரச்சினைகள்
- வஸ்து பூஜா
- வணிக சிக்கல்கள்
- அதிர்ஷ்ட கல்

என் தொழிலை எவராலும் உடைக்கவும் முடியாது. எனக்கு முன் எவராலும் வேலை செய்யவும் முடியாது. இது எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்

0405075655

2a, chandler road, noble Park, 3174.

Location: Dandenong

# ஒப்பந்தச் சட்டம்

# Law of contract

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.




முன்னைய இதழ்களில் ஒப்பந்தம் என்றால் என்ன, ஒப்பந்தம் ஒன்றின் முக்கியமான தேவைப்பாடுகள் எவை எவை எனப் பார்த்தோம்.

இந்த மாத இதழில் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்வதற்கான தகைமை (capacity to contract) என்பதை பற்றி சிறிது ஆராய்வோம். பொதுவான விதி என்னவெனில் எவரும் எவருடனும் ஒப்பந்தம் செய்யலாம்.

எனினும் சிலர் செய்யும் ஒப்பந்தங்கள் அவர்களுக்கு எதிராக வலுவாக்கப் படமுடியாததாகும். எனினும் அவர்களால் அவ்வொப்பந்தம் வலுவாக்கப்பட முடியும்.

உதராணமாக ஒரு பராயமடையாதவர் செய்யும் ஒப்பந்தம் (minors contract) அந்தப் பாராயமடையாதவருக்கு எதிராக வலுவாக்கப்பட முடியாததெனினும் அந்தப்பாரயமடையாதவரால் வலுதாக்க கூடியதாகும்.

இவ்வொப்பந்தம் ஆங்கிலத்தில் Voidable contract என அழைக்கப்படும்.

அடுத்தாக போதைப்பொருள் அல்லதுமதுபானமருந்தியவர்களால் செய்யப்படும் ஒப்பந்தம் அவர்களுக்கு எதிராக வலுவாக்கப்பட முடியாது.

சிறைக்கைதிகளால் செய்யப்படும் ஒப்பந்தங்கள் பொதுவாக சொல்லப்போனால் வலுவாக்கப்பட முடியாது.

அடுத்தாக மனநோயாளிகளால் செய்யப்படும் ஒப்பந்தம் Voidable contract எனப்படும்.

இன்னொரு வகையினரால் செய்யப்படும் ஒப்பந்தமானது வங்குரோத்து அடைந்தவர்களினால் bankrupts ஒப்பந்தமாகும். இவர்களால செய்யப்படும் ஒப்பந்தங்களும் இவர்களுக்கு எதிராக வலுதாக்கப்படமுடியாது.

பராயமடையாதவர் செய்த ஒப்பந்தம் அவர் பராயமடைந்த பின்னர் வலுதாக்க கூடியதாகும். இதுபோன்றே போதைப் பொருள் மற்றும் மதுபானம் அருந்திய நிலையில் உள்ளவர்களால் செய்யப்படும் ஒப்பந்தங்களும் அவர்கள் சுயநினைவையடைந்த பின்னர் வலுவாக்கப்படக் கூடியதாக மாற்றமடையும். இத்துடன் ஒப்பந்த சட்டம் தொடர்பான விடயங்கள் நிறைவுக்கு வருகின்றன.

# இருளிலிருந்து ஒளியை நோக்கி...

# இடைவிலகும் மாணவர்களின் நம்பிக்கைவழிகாட்டி ‘மை ஸ்கில்ஸ்’

**மலேசியாவின் தலைநகரான கோலாம்பூரிலிருந்து சுமார் 150 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது பலும்பாங் என்ற பிரதேசம். இங்கு மலைகளுக்கும் ஆற்றுப்படுக்கைக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ளது ‘மை ஸ்கில்ஸ் ‘என்ற அறவாரியம்.**

**மலேசியாவில் வழக்கறிஞராகவும் சமூக சேவையாளராகவும் அறியப்பட்ட பசுபதி சிதம்பரம் இவ்வறவாரியத்தை நடத்தி வருகிறார். ஏட்டுக்கல்வி ஏற மாணவர்களின் மாற்றுத் திறனை இணங்கான வழி சமைக்கும் விதமாக இவ் அறவாரியத்தை உருவாக்கி வைத்துள்ளார்.**

**அவரை எதிரொலிக்காக நேர்காணல் செய்தபோது..**

**நேர்கண்டவர் : ஜெ.ஜெ.**

**கேள்வி: ’மை ஸ்கில்ஸ்’ ( MySkills Foundation) என்ற இந்த அறவாரியத்தை நிறுவ முனைந்ததின் காரணம் என்ன?**

பதில்: நான் 30 வருடங்களுக்கு மேலாக சமூகம் சார்ந்த பணியில் ஈடுபட்டுவருகின்றேன். எமது சமூகம் முன்னேறியுள்ளதா என்ற கேள்வி எனக்குள் எப்போதும் இருந்தது. இதன் அடிப்படையில் தான் நாம் மாணவர்கள் குறித்து ஒரு ஆய்வினைச் செய்தோம். அதில் பத்தாண்டு காலத்திட்டத்தில் 35 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளில் பதியப்பட்டிருந்தனர். அவர்களில் 20 ஆயிரம் பேர் தமிழ்ப்பள்ளிகளிலும் 13 ஆயிரம்பேர் மலாய் பள்ளிகளுக்கும் 2 ஆயிரம் பேரளவில் சீனப் பள்ளிகளுக்கும் சென்றுள்ளனர். இவர்களில் 28 ஆயிரம்பேரே ’எஸ். பி. எம்.’ வரை சென்றுள்ளனர். அதாவது மலேசியாவில் ’எஸ். பி. எம்.’ தேர்வு எழுதியவர்கள் மட்டும் தான் எந்தத் தொழில்திறன் கல்லூரியிலும் படிக்க முடியும். 28 ஆயிரம் பேரைத் தாண்டி 7ஆயிரம் மாணவர்கள் என்னானார்கள் என்று தெரியவில்லை.

இதன் பின்னர் நாம் மேற்கொண்ட அடுத்த கட்டத் தேடுதலில் போது மேலும் அதிர்ச்சிகரமான விடயங்கள் தெரியவந்தன. சிறைச்சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் பின்புலத்தை ஆராயும் போது அவர்களில் பெரும்பாலானவர்கள் இடைவிலகிய மாணவர்களாகவே இருந்தனர். அவர்கள் அவ்வாறு வழிமாறிப்போவதற்குக் காரணம், தகுந்த வழிகாட்டிகள் கிடைக்காமையே என்பதையும் அறிந்தோம். தொழிற்கல்வி மூலம் இவ்வாறு இடைவிலகுவோருக்கு உதவ முடியும் என்று எண்ணினோம்.

இடைவிலகும் மாணவர்களுக்கு தொழிற்கல்வி மட்டும் வழங்கினால் போதுமா என்ற கேள்வி பிறந்தது. இல்லை. அவர்களின் சிந்தனையில் மாற்றம் கொண்டுவரவேண்டும். ஏட்டுக்கல்வி வரவில்லை என்றால் தொழிற் கல்வி மூலம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வரவேண்டும்.

அதற்கான முயற்சியில் ’மை ஸ்கில் ’சிந்திக்கும் திறனுக்கு முதலிடம்கொடுக்கிறது. பாடசாலைக்கல்வி மட்டும் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில்லை. அதனைத் தாண்டி வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களைக் கொடுப்பதே ’மை ஸ்கில்’.

**கேள்வி: மலேசியா முன்னேறிய நாடுதானே. பிறகு எப்படி தமிழ் மாணவர்களின் நிலைமை இவ்வாறிருக்கிறது..?**

பதில்: மலேசியாவைப் பொறுத்தவரை இரண்டு வகையான தமிழர்கள் உள்ளனர். ஒன்று யாழ்ப்பாணத்தமிழர்கள் மற்றும் இந்தியத்தமிழர்கள். யாழ்ப்பாணத்தமிழர் பிரித்தானியர்களின் சிவில் நிர்வாகத்தை கையாளுவதற்காக அழைத்து வரப்பட்டவர்கள். தென்னிந்தியத்தமிழர்கள் வலிமையான - உழைப்பாளிகள் என்ற அடிப்படையில் மலேசியா மற்றும் பல நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களே இலங்கையில் உள்ள மலையக மக்களும். மலேசியாவில் உள்ள யாழ்ப்பாணத்தமிழர்கள் பொருளாதர ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளனர். அவர்களுடைய பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். ஆனால் மலேசியாவில் இந்திய வம்சாவளித் தமிழர்கள்தான் இன்று வரை பொருளாதாரத்திலோ அல்லது கல்வியறிவு வீதத்திலோ வளர்ச்சி பெறவில்லை. குறிப்பாக இலங்கையில் மலையகத்தமிழர்களின் வளர்ச்சி வீதம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே மலேசியாவிலும் உள்ளனர். எனவே அவர்களுக்கான சிந்தனை மட்டத்தை அடிமைப்படுத்தினால் அவர்களை நிரந்தரமாக அடிமைப்படுத்த முடியும். அதையே பல அரசியல்வாதிகள் செய்கின்றனர்.

கிராமங்களில் வாழும் பெற்றோருக்கு கல்வி குறித்த தேவையோஅல்லது தங்களது பிள்ளைகளுக்கு கல்வியைப் புகட்ட வேண்டும் என்ற அறிவோ இல்லை. அவர்களைப் பொறுத்தவரை ’தாங்கள் கல்வி கற்காமலேயே வேலை செய்கிறோம். அதேபோல தங்கள் பிள்ளைகளுக்கும் கல்வி தேவை இல்லை’ என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர்.






**கேள்வி: மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதற்கான காரணங்களாக நீங்கள் கருதுபவை..? இங்கு வந்து இணையும் மாணவர்கள் சொல்லும் முதன்மைக் காரணங்கள் ஏதாவது.?**

பதில் : மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஆறாம் ஆண்டுக்கு மேல் பாடசாலைக்கல்வி கடினமாகிறது. மலாய் மொழிக்கு உள்வாங்கப்படும் போது அவர்களால் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. ஆறாம் ஆண்டுக்கு மேல் கல்வி கற்கும் போது மலாய் மொழியில் சரளமாகப் பேச முடிவதில்லை. ஆசிரியர்களுடன் தொடர்பைப் பேணுவதில் மொழிப்பிரச்சினை, சக மாணவர்களுடன் ஈடு கொடுக்க முடியாமை. இத்தகைய காரணங்களால் தங்களுக்குள்ளேயே ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு பாதுகாப்புக் குழுவாக உருவாக்கி வைத்துக்கொள்கின்றனர். இவ்வாறானவர்களுக்கு சமூகத்தின் மீது கோபம் வருகின்றது.

இத்தகைய மாணவர்களின் வறுமை, வெறுமை அனைத்தையும் சமூகத்தில் உள்ள போதைப்பொருள் கடத்தல் கும்பல்கள் பயன்படுத்திக்கொள்வார்கள். அதில் மாட்டுப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டால் பாடசாலை அவர்களை ஏற்றுக்கொள்ளாது. மீண்டும் அவர்கள் அந்தக் கும்பலுக்குள் சிக்கி சின்னபின்னமாகின்றனர்.

**கேள்வி: பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் வழி தவறிப் போவதிலிருந்து எவ்வாறு மீட்கிறீர்கள்..?**

பதில்: சுமார் 30 வருடங்களாக நான் இந்த சமூகசேவையில் உள்ளேன். ஆகையால் இந்த இந்தத்திட்டம் குறித்து சமூகம் மீதான அக்கறை உள்ளவர்கள் இவ்வாறான மாணவர்களை இனங்கண்டு எங்களிடம் அனுப்பிவைக்கின்றனர். பல பாடசாலை ஆசிரியர்கள் எங்களிடம் தொடர்பு கொண்டு மாணவர்கள் குறித்த விவரங்களைச் சொல்வர். காலையிலிருந்து இரவு 10 மணி வரை மாணவர்களை இணைத்துக் கொள்வோம். இங்கு வரும் மாணவர்கள் சிலர் தமது பெயரைக்கூட எழுதத் தெரியாதவர்களாக உள்ளனர்.

இடை விலகும் மாணவர்களை குறிப்பாக 14 வயது 15 வயதுடைய மாணவர்களை போதைப்பொருள் கும்பல்கள் பயன்படுத்துகின்றன . அவர்களை இங்கு பெற்றோர் - உறவினர்கள் அழைத்து வருகின்றனர். பொதுவாக ஒரு சட்டத்தை எமது நிறுவனத்தில் வைத்துள்ளோம். இங்கு வரும் எவரும் தொலைபேசியைப் பயன்படுத்த முடியாது. அதனால் அவர்களால் வெளித்தொடர்பைப் பேண முடியாது. ’மை ஸ்கில்’ அமைந்திருக்கின்ற இடத்தை பார்த்தீர்கள் என்றால் மலையும் ஆறும் இடைப்பட்ட இடத்தில் அமைந்திருக்கிறது. எந்த ஒரு புறச்சூழலும் அவர்களை திசை திருப்ப முடியாது. ஆகவே மாணவர்கள் தங்களது சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அத்துடன் இவ்வாறு வரும் மாணவர்களிடம் நாம் நிறைய நேரம் பேசுகிறோம். போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையால் வரும் விபரீதங்கள் குறித்து பேசுகிறோம். அந்த மாணவர்களிடமே அந்த விளைவு குறித்து தேடலையும் விட்டுவிடுகிறோம்.

**கேள்வி: இடைவிலகும் மாணவர்கள் குறித்து ஆசிரியர்களின் பங்கு என்ன..?**

பதில்: ஆசிரியர்கள் சமூகத்தின் மீதான அக்கறையானவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் ஆசிரியம் என்பது தொழில் இல்லை. அது அடுத்ததலைமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பு என்பதை எல்லா ஆசிரியர்களும் உணரவேண்டும். கெட்டித்தனமான மாணவர்களுக்கு ஊக்கமளிப்பது மட்டுமல்ல ஆசிரியரின் கடமை . பின்தங்கிய மாணவர்கள் மீது ஆசிரியர்களின் கனிவான பார்வை படவேண்டும்.

**கேள்வி: ’மை ஸ்கில்ஸ்’ இல் மாணவர்களுக்கு என்னனென்ன துறைசார் கல்வியை வழுங்குகிறீர்கள்..?**

பதில்: இங்கு ஒரு மாணவன் இருக்கும் காலத்தில் அனைத்துவிதமான கற்கைநெறியையும் கற்கமுடியும். அதாவது ’ஏசி’ மெக்கானிக் படிக்கும் ஒரு மாணவன் சமையல் துறையையும் படிக்கமுடியும். அவ்வாறு கற்கும் போது மாணவன் வெளியேறிச் சென்று, வாய்ப்புக் கிடைக்கும் தொழிலைச் செய்ய முடியும். அதற்கான ஆசிரியர்களை நாம் பணிக்கமர்த்தியுள்ளோம். அதனைவிட பல தன்னார்வத் தொண்டர்களும் இருக்கின்றனர். நானும் ஒரு தொண்டன்தான்.

**கேள்வி: இங்கு வந்து துறைசார் தொழில்களில் பயின்ற மாணவர்கள் மீண்டும் அவர்கள் தமது பழைய வாழ்க்கைக்குள், இருண்ட நிலைக்குத் திரும்பிய சம்பவம் ஏதும் உண்டா..?**

பதில்: ஆம். உண்டு. இங்கிருந்து பயின்று மீண்டும் அதே ஊருக்குச் செல்லும் போது அதே கிரிமினல்கள் வளர்ந்து இருப்பார்கள். அவர்கள் ’நீ என் நண்பன் தானே’ என்ற போர்வைக்குள் இழுத்து மீண்டும் அவர்களை கிரிமினல் ஆக்கி விடுவார்கள். அதனால் தற்போது இங்கு துறைசார் கல்வியைக் கற்ற பின்னர் அவர்களின் சொந்த இடங்களில் விட்டு வேறு இடங்களில் வேலை பெற்றுக்கொடுக்க முயல்கிறோம்.

**கேள்வி: இந்த அறவாரியத்தை நடத்த பணம் தேவை தானே. அதை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள் ..?**

பதில்: நன்கொடை, மானியம் இரண்டையும் கொண்டு தான் நடத்த முடியும். ஆனால் நன்கொடையோ, மானியமோ தொடர்ந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியதல்லவா.? அதனால் சொந்தக் காலில் நிற்கக் கூடியமாதிரியான திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டோம். ஒரு நாளைக்கு 3 வேளை சாப்பாடு கொடுக்கிறோம். செலவைக் கட்டுப்படுத்த சாப்பாட்டை வெளியில் இருந்து பெற்றால் மாதம் 90 ஆயிரம் வெள்ளிகள் செலவாகும். வருடத்துக்கு 10 மில்லியன் வெள்ளிகள் செலவாகின. ஆனால் தற்போது எமது அறவாரியத்தின் மாதச் செலவே 30-40 ஆயிரம் வெள்ளிகள் தான். அது எப்படி என்றால் எங்களின் நிலத்திலேயே சொந்தத் தோட்டம் உள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)



Best Start
Best Life

## இலவச பாலர் பள்ளி: 2024 க்கு உங்களின் பிள்ளையைப் பள்ளியில்சேருங்கள்

விக்டோரியாவில் மூன்று, நான்கு வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச பாலர்பள்ளி கிடைக்கும். இதனால், ஒரு பிள்ளைக்கு ஆண்டொன்றிற்கு ஒருமுறை $2500 வரை குடும்பங்களுக்குச் சேமிப்பாகும்.

இரண்டு ஆண்டுகள் பாலர்பள்ளியில் கற்பது உங்கள் பிள்ளையின் திறன்களை மேம்படுத்த உதவுவதால் அந்தப்பிள்ளை பாடசாலையிலும், வாழ்க்கையிலும் திறமையாகச் செயற்படும்.

பாலர்பள்ளி அனைவருக்கும் இலவசமாகும். 'ஹெல்த் கெயர் காட்' (Health Care Card) அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது இதைப்போன்றது) உங்களுக்குத் தேவையில்லை

vic.gov.au/kinder/tamil இல் அதிக தகவல்களைப் தேடிப்பார்க்கவும்.

THE EDUCATION STATE | VICTORIA State Government | Department of Education | KINDERGARTEN Victorian Government Approved



# CEYLON EXPRESS

## MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

ஊழிக்காலம்-2

49



# புயலுக்குப்பின்...

மே18இல் இருநூற்றைம்பது பேர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான உணவைத் தயாரிக்க பார்வதியின் குழுவுக்கே வாய்த்தது. இங்கே உள்ளவர்களை விட இருநூற்றைம்பது பார்சல் வேண்டும் என்றனர். விடுதலை செய்யப்படுவோரைப் பொறுப்போற்க வருபவர்களுக்கே அது. கோழிக்கறி, வெண்டிக்காய், கிழங்கு கடலைக்கறி என்பன திட்டமிடப்பட்டன. பிள்ளைகள் வெட்டவேண்டிய மரக்கறிகளையும் இறைச்சியையும் வெட்டினர்.

பார்வதி இறைச்சியை அடுப்பேற்ற முயல "அதைப் பொரிக்க வேண்டும் " என்றனர். "அப்பிடியென்றால் பத்துமணிக்கு சாப்பாடு குடுக்கேலாது " என்றாள் பார்வதி.

" அமம்மீ. இந்தச் சட்டியும் காணாது." பார்வதி தடுமாற சமையல்காரன் வந்து " அம்மா இவ்வளவு பேர் இருக்கிறாங்க? அவுங்க செய்யட்டும். நீங்க போங்கம்மா போய் ரெஸ்ற் எடுங்க" என்றான். " அப்பிடிச் சொல்லடா தம்பி" என்றவாறே பார்வதி தன்னுடைய அறைக்குப் போனாள்.

" மம்மி வரட்டாம்"

"மறுபடியுமா?"

"ஓம் மம்மி திருமணமான ஆக்களை வரட்டாம்"

அவள் எரிச்சலுடன் பேசாமல் இருந்தாள். மாடியிலிருந்து சந்திரா இறங்கிவந்து கொண்டே, "மம்மீ போகயில்லையா? எல்லாரும் வந்திட்டினம்".

பார்வதி அசையவில்லை. கவிதா குளித்துவிட்டு அப்போதுதான் வந்தாள்.

பார்வதியை உலுப்பினாள். "என்ன கலியாணங் கட்டிவைக்கப்போறாங்களாம்"

" இதென்ன கதை?" பார்வதி நம்பாமல் கேட்டாள்.

" மம்மீ, கலியாண எழுத்தில்லாதவைக்கு எழுதப்போறாங்களாம். அதுக்குத்தான் பதியுறாங்களாம்."

"அப்ப ஏன் நாங்கள்? எனக்கு எழுத்திருக்கு" என்றாள் பார்வதி." எதுக்கும் போங்க. என்னதான் நடக்குதெண்டு அறியலாமே.." பார்வதி வேண்டாவெறுப்பாக எழுந்து போனாள். அவளுடைய பதிவு முடிந்ததும் வந்துவிட்டாள்.

இனியும் பொறுக்க முடியாது என்று நினைத்தவள். தன் விடுதலையைக் கோரி ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினாள். சிலர், வெளியிலிருந்த உறவினர்கள் ஊடாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து இரண்டு மூன்று தவணைகளில் விடுதலைபெற்றுச் சென்றனர். அந்தச் சம்பவமானது பல பிள்ளைகளை அந்தவழியை நாட வழிவகுத்தது. செல்வம் படைத்தவர்கள் சட்டவாளர்களைப் பிடித்து வழக்கைத் தாக்கல் செய்யத் திரிந்தனர்.

பார்வதி எழுதிய கடிதத்தை கவரில் இட்டு விலாசத்தை எழுதியபின், இந்த முகாமில் இயங்கிய உப தபால் அதிபரிடம் நேரிலேயே போய் அதைக் கொடுத்தாள். மேலும் சிலர் கடிதம் போட வந்திருந்தனர்.

இதைவிட இந்தப் பெண் தபாலதிபர், பிள்ளைகளுக்குத் தேவையான எழுதும் உபகரணங்களையும் பிறந்தநாள் வாழ்த்து மடல்கள் தயாரிப்பதற்கான வண்ணத்தாள்கள், வாணிஸ் தாள்கள் , பசைகள் என்பவற்றையும் கொண்டுவந்து கொடுத்தாள். முதல் நாள் பணத்தைக் கொடுத்துவிட்டால் மறுநாள் பொருட்கள் வந்துவிடும். இந்தப் பெண்கள் அழகான வாழ்த்து மடல்களையும் ஓவியங்களையும் உருவாக்கினர்.

இரண்டு தினங்களின் கடிதம் ஏதும் வந்ததா எனப் பார்க்க பார்வதி தபால் அதிபரிடம் போனாள். அது பாடசாலை நேரம். எனவே பிள்ளைகள் வகுப்பில் இருந்தனர். அந்தப் பெண் தபாலதிபர் தனியே அமர்ந்து ஏதோ கொப்பிகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். பார்வதி.

"வணக்கம். ஏன்னகடுமையானவேலையா.?" என்று கேட்டாள்.

"ச்சா. உங்களத்தான் எதிர்பார்த்தன்"

" ஏன் ஏதும் பிரச்சினை?"

"ம்.. நீங்க சனாதிபதிக்கு விலாசம் போட்டுத்தந்த கடிதத்தை, அந்த வயது போன மெடம் எடுத்திட்டாள்".

"என்ன, உங்களட்ட கடிதம் 'செக்' பண்ணுகினமா?"

" இல்லை சும்மா சென்றியில உள்ளுக்கு வரக்கையும் வெளியில போகேக்கயும் பாப்பினம். இதுவரை எதையும் எடுத்தது கிடையாது, இண்டைக்குத்தான் முதல்."

சரிதான் இயக்கத்திலும், தலைவருக்கு கடிதம் போட்டால், அதை தலைமைச் செயலகம் உரிய நபருக்கு அனுப்பி பதிலை கேட்கும். இவர்களும் எதையாவது எழுதி அனுப்புவார்கள். கடிதம் போட்டவரையும் கூப்பிட்டு மிரட்டியதும் உண்டு, அதுபோல தான் இதுவும்.

அன்று மாலையே அந்தமேடம் பார்வதியைச் சந்தித்தாள். மாலையில் உள்கிறவுண்டில் ஆமிப்பெடியள் கிரிக்கட் அடிப்பார்கள். விளையாட்டு சுறுசுறுப்பாக இருக்கும். பார்வதியும் வேறு சில திருமணமான பெண்களும் ஓரமாக சவுக்குமர நிழலில் உட்காந்து விளையாட்டை ரசிப்பார்கள். அந்த நேரம் பார்த்து அங்கே வந்தாள். அவளைக்கண்டதும் மற்றப்பிள்ளைகள் ஒதுங்கிக் கொண்டனர்.

"அம்மா.. சனாதிபதிக்கு கடிதம் போட்டீங்களாம்.."

"ம். போட்டன்" என்றாள் பார்வதி.

"ஏதும் சாப்பாடு சரியில்லை, நாங்க சரியில்லை எண்டு ஏதும் எழுதினீங்களா" என்றாள்.

'ஏன் இன்னும் வாசிக்கவில்லையா..?,' என்று கேட்கத்தான் நினைத்தாள் என்றாலும்,

"இல்லை" என்று மட்டும் கூறினாள்.

இப்போது கூட 'அந்தக் கடிதத்தை நான் எடுத்துவிட்டேன்' என்பதை அவள் சொல்லவில்லை. அவ்வளவு துவேசத்தை உள்ளே வைத்திருந்தாள்.

வெளியில் வேசம் போட்டாள். அவள் அப்பால் போனதும் அங்கு பிரதான செயலக அதிகாரியான கேணல் கூப்பிட்டு அனுப்பியிருந்தான்.

"அம்மா, ஐம்பது சோடிக்கு கலியாணப் பதிவு செய்ய வேணும், என்ன பொருட்கள் வேணும், ஆங்கிலத்திலோ, சிங்களத்திலோ எழுதித்தாங்க" என்றான். பார்வதி மேலும் இருவரைத் துணைக்கு வைத்துக் கொண்டு பட்டியலைத் தயார் செய்து கொடுக்கப்போனாள். அவள் கொடுத்துவிட்டு திரும்ப, கொழும்பிலிருந்து ஆடம்பர வாகனங்கள் இரண்டு வந்து அலுவலகத்தின் முன் நின்றன.

மிக நாகரிகமான ஆண்கள் இருவரும் ஒரு பெண்ணும் இறங்கினர். 'ஆ' வென்று வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகள், பின்னர் அந்த இடத்திலிருந்து மெதுவாக நழுவினார்கள்.

ஒரு காமென்ற் நிறுவனம் தையலுக்கு பிள்ளைகளைக் கொண்டு செல்ல வந்திருந்தது. "விரும்பியவர்கள் பேர் கொடுங்கோ" என்றான் கேணல்.

நூறு பிள்ளைகளை தையல் தொழிலுக்காக கொழும்புக்கு அனுப்ப சம்மதம் என பெற்றோர் படிவங்களில் ஒப்பமிட வேண்டியதாயிருந்தது.

குறித்த நாளில் பம்பமடுவில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகளும் இந்த முகாம் பிள்ளைகளும் அவர்களது பெற்றோரும் இந்த முகாம் முழுவதும் திரிந்தனர். பெற்றோருக்கு மத்தியான உணவும் வழங்கப்பட்டது. மாவீரர் நாளுக்கு பெற்றோர் வந்து பிள்ளைகளுடன் திரிவார்களே, அந்த நினைவு இதை ஒத்ததாக இருந்தது.

நாட்டியம், நாடகம் பழகப்போன பிள்ளையளும் வந்தனர். இவர்களில் பலர் நிராகரிக்கப்பட்டு, சிலர் தேர்வாகினர். ஒரே மகிழ்ச்சியும் குதூகலமுமாக இருந்தது.

ஏற்கனவே காதலித்திருந்த அல்லது பதிவில்லாத தம்பதிகள் என எழுபதுக்கு மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களது சோடிகளைச் சந்திக்க அழைத்துச் சென்றனர்.

அதே தினம் ரத்மலானையில் படிக்கச் சென்றிருந்த பதினெட்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை விடுதலை செய்யவெனக் கொண்டு வந்தார்கள். இங்கிருந்த பெண்கள் சீனியில் எறும்பு மொய்ப்பதுபோல அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். பெரும்பாலும் படைத்துறைப்பள்ளியின் பிள்ளைகளே இருந்தனர். பிள்ளைகள் அவர்களை மொய்த்து நிற்க, மேஜர் வந்து. " அட என்ன அவசரம், சோடி பார்த்து வெய்யிங்க .வாற கலியாண எழுத்து முடிய ஒங்கள சேர்த்து வைப்பம்" என்றான்.

அவர்கள் வெட்கப்பட வேண்டுமே..

"போங்கசேர்.., எங்கள வெளியவிட்டா அந்தச் செலவு உங்களுக்கில்லாம நாங்களே பாத்திருவம்" என்றனர். யாரும் விலகிப் போகவில்லை, பெடியளும் கலகலவென்று பேசித்தீர்த்தார்கள்.

கவிதாவும் தையலுக்குப் போவதாகப் பெயர் கொடுத்திருந்தாள். எனவே அவளுடைய தாய் வந்திருந்தாள். அடையாள அட்டை, உடுப்புகள் போன்ற பொருட்களைக் கொண்டு வந்திருந்தாள். தாம் கொழும்பிலிருந்து திரும்புமுன் இங்குள்ளவர்கள் விடுவிக்கப்படலாம் என்ற எண்ணம் பலரிடம் இருந்தது.

முகாம் முழுவதும் ஒரு பரபரப்பு இருந்தது. பார்வதிக்கு இவை எதிலும் நாட்டமில்லை. தனது குறையில் கிடந்த நாவலை எடுத்து எழுத ஆரம்பித்தாள். அன்றைக்கே அதன் முடிவும் எழுதப்பட்டது.

கவிதா மற்றவர்களுடன் புறப்பட்டாள். பார்வதியின் மடியில் படுத்து, அவளைத் தழுவி முத்தமிட்டு, "சாப்பிடு. பட்டினி கிடந்திராதை. தேத்தண்ணி எடு, முடியாட்டி போட்டுக்குடி" என்று நிறைய அறிவுரைகூறி பிரிய மனமின்றி போனாள்.

காலையில் பார்த்தால் மிக்சர், பிஸ்கட், கச்சான்,சீனி,கோப்பி, எல்லாம் இங்கேயே கிடந்தன. பார்வதிக்கென வைத்துவிட்டுப்போயிருந்தாள்.

'கடவுளே' இந்தக் கடனெல்லாம் எப்ப கட்டுறது. இந்தப் பிள்ளை ஆர்? என்ர ஊரும் இல்லை அக்கரைப்பற்று. எப்ப நான் போப் போறனா, அவள் எப்ப வரப்போறாளா..?" பார்வதி மிகவும் மனம்நொந்தாள்.

"மம்மீ கதை கேள்விப்பட்டனிங்களே"

" என்ன கதை"

"ஒருக்கா சொன்னாங்கள் பதிவுத்திருமண முள்ளவைய விடப்போறம் எண்டு"

"எங்கடி நானும் கலியாணப்பதிவுக் கொப்பி கொணந்து குடுத்தநான்தானே"

"இப்ப எழுதாதவைக்கு தாங்கள் எழுதப்போகினயாம்."

"ஓமாமெண்டுதான் தமிழ்த் திருமணத்துக்கான சடங்குப் பொருளுகள் கேட்டு எழுதினவங்கள்."

" இப்ப கணவனும் மனைவியும் தடுப்பில இருந்தாத்தான் எழுதுவினமாம்."

" அப்ப எண்பது தொண்ணூறு சோடி தெரிவு செய்தாங்களே?"

"ம்கும். அசுக்கு பிசுக்குங்கள் தங்கள உலகம் முழுக்க காருண்ய சீலர் எண்டு காட்டத்தான்"

"என்னடி இப்படிச் சொல்லுறாய்..?"

"மம்மீ அம்பது சோடிக்கு கலியாணம். தாலிகட்டோ மாலை மாத்துறதோ? தனிவீடு. மற்றவைக்கு அடுத்த கட்டமாம்."

" கிழிஞ்சுது போ,அப்ப கட்டங்கட்டமா எல்லாப்பிள்ளையளையும் கட்டித்தான் குடுக்கப் போறாங்களோ."

" ஆரோ மாட்டிற்றாங்கள். இதைக்காட்டி அவங்களட்ட கறக்கப் போறாங்கள் வேற யென்ன.."

"தெரிவு செய்த கனபேற்ற புருசன்மாரை வெலிக்கந்தைக்கு அனுப்பிட்டாங்கள். இப்ப அவயட கலியாணத்துக்கும் பட்டை நாமம்"

"ஏனாத்தை பூசாவில செல்லாக்கா மதியக்காவின்ர புருசன்மார் அங்கதானே. அவைக்குமில்லை."

(இன்னும் வரும்)

# இருளிலிருந்து ஒளியை நோக்கி...


(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலிருந்து 40 வீதமான காய்கறிகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன், பிள்ளைகளே சமைக்கிறார்கள். அது மட்டுமல்ல எமது விளைநிலத்தில் முருங்கை மரம் உள்ளது. அதனை மருந்து வில்லைகளை போல தயாரித்து விற்பனை செய்கிறோம். மஞ்சள் போன்றவற்றையும் பவுடராக்கி விற்பனை செய்கிறோம். இயற்கைப் பசளைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறோம். அதன் ஊடாகக் கிடைக்கும் பணத்தை வைத்து இந்த அறவாரியத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்று எண்ணியுள்ளோம்.



**கேள்வி: நீங்கள் சொன்னீர்கள் இலங்கையில் மலையக மக்களைப் போலதான் மலேசியத் தமிழர்களும் ஒரே நிலையில்தான் உள்ளார்கள் என்று.. இலங்கையில் -மலையகத்தில் -உங்கள் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் எண்ணம் ஏதும் உள்ளதா..?**

பதில்: நான் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் நான் விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்திக்கும்போதும் இது குறித்துப் பேசியிருந்தேன், கிளிநொச்சியில் ஒரு தொழிசார் நிறுவனத்தை உருவாக்கவேண்டும் என்று. தற்போது நமது சிந்தனையில் மலையகத் தமிழர்களை தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வரவேண்டும். ஏனெனில் மலேசியாவில் தோட்டப்புறங்களை விட்டு நாம் வெளியே வந்துவிட்டோம். ஆனால் இலங்கையில் மலையகத்தமிழர்கள் இன்னமும் தோட்டப்புறங்களை விட்டு வெளியே வரவில்லை. அவர்களுக்கான செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.


No One Beat
Our Price
List of works
* Fence
Timber fence
Colorbond fence
Aluminum slat and picket fence
Metal fence and auto gates
* decking
Merbau decking
Composite decking
* Landscaping
PROACTIVE RENOVATION SERVICES
Contact : 1800 960 162


"LANKA" ASTROLOGY CENTRE
PANDIT: ADI GURUKUL
வாழ்க்கையின் நம்பிக்கை
உங்கள் புதிய வாழ்க்கை,
புதிய நாளுக்கு ஹலோ சொல்லுங்கள்
உங்கள் புதிய மகிழ்ச்சியை
ஏற்றுக்கொள்ளுங்கள்
சூனியத்தை 100% அகற்றுவதற்காக,
துரதிர்ஷ்டம் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து
பாதுகாக்க நாடுங்கள்
விருப்பத்திற்குரியவற்றை
மீண்டும் அழைத்து வருவதில் வல்லுநர்
அனுபவம் வாய்ந்தவரின் கைரேகை பார்த்தல், முக வாசிப்பு, எண் கணிதம்,
புகைப்பட வாசிப்பு, ஜாதகம் மற்றும் அதிர்ஷ்ட எண்கள் பார்வை
அனைத்து பிரச்சினைக்கும் இங்கே தீர்வு உண்டு
ஆரோக்கிய பிரச்சினை
காதல் பிரச்சினை
உறவுமுறை
கல்விப் பிரச்சினை
தீய பார்வை
நிதி மற்றும் வியாபாரம்
தொழில் மற்றும் பணப்பிரச்சினை
பொறாமை, சாபம்
இருண்ட கனவு
திருமண பிரச்சினை
கணவன் - மனைவி
குழந்தயின்மை
விவாகரத்து
குடும்ப விவாதம்
பில்லி சூனியம்
எதிரிகள் போன்ற...
அனைத்து பிரச்சினைகளுக்கும்
இங்கே தீர்வு உண்டு
CALL FOR AN APPOINTMENT +61 426 954 355
Melbourne Victoria Email : adithyasharma138@gmail.com
PRAVATE & CONFIDENTIAL


Mahaweli
Sri Lankan
Seafood Taste
from the Indian Ocean
FRESH FISH
WILD CAUGHT
Mahaweli
+61 404200150
www.mahaweli.com.au


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Video Intercom
Access Control
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING

SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION

LIVE CHAT ON WEBSITE

TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)

WWW.TRANSCOCARGO.COM.AU